விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 04 புதன்கிழமை (20.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 244

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஐ.நா. விசாரணையாளர்கள் இலங்கை வர முடியாது

## விசா வழங்க மகிந்த மறுப்பு

(கொழும்பு) போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை செய்யவுள்ள ஐ.நா. விசாரணையாளர்களுக்கு இலங்கைக்கு வருவதற்கு விசா வழங்கப்பட்டமாட்டாது என்றும் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை பகிர முடியாது எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 19 ஆம் பக்கம் பார்க்க....



## காணாமல் போனோர் வெளிநாடுகளில் அடைக்கலம் தேடியிருக்கலாம் !

### ஜனாதிபதி ஆணைக்குழு கண்டுபிடிப்பு



(கொழும்பு)

இலங்கையில் காணாமற் போனவர்கள் வெளிநாடுகளில் அடைக்கலம் தேடியிருக்கலாம் என காணாமற்போனவர்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக் குழு கருத்து வெளியிட்டுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்திவரும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான மூன்று பேர் கொண்ட ஆணைக் குழுவுக்கு 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில ஜனாதிபதி ஆணைக்குழு வடக்குக் கிழக்கின் பல்வேறு இடங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில், காண்மாமற் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கு உள்ளூர் மட்டத்தில் பெரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என காணாமல் போனோரின் உறவுகள் கூறுகின்றன.

இந்த நிலையிலேயே, இலங்கையில் காணாமற்போனவர்கள் வெளிநாடுகளில் அடைக்கலம் தேடியிருக்கலாம் என்று ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. காணாமற்போனவர்கள் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியிருகலாம் அல்லது அகதிகளாக தஞ்சம அடைந்திருப்பலாம் என்றும், எனவே, வெளிநாடுகளில் புகலிடம் தேடியவர்களின் விபரங்களை வெளிப்படுத்துமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம கோரியுள்ளார்.

அத்துடன், வெளிநாடுகளில்அடைகலம்கோரியுள்ள ஆயிரக்கணக்கானோரில் உள்ளூர் 19 ஆம் பக்கம் பார்க்க....

## இருவர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் மற்றும் பணியாளர் ஆகியோர் வாள்வெட்டுக்கு இலக்காகினர். இச்சம்பவம் நேற்றிரவு 9.00 மணியளவில் கல்வியங்காடு கலைமகள் வீதியில் இடம்பெற்றது.


இச்சம்பவத்தில் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் ஜயாத்துரை மற்றும் முருகா என்று அழைக்கப்படும் பணியாளர் ஆகியோர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வழமைபோன்று 19 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த அனுமதித்தால் மட்டுமே சம்பந்தனை மோடி சந்திப்பார் !

### சொல்கிறார் சுப்பிரமணிய சுவாமி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் அனுமதித்தால் மடடுமே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பார் என பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார். 19 ஆம் பக்கம் பார்க்க....



## 14 வயதுச் சிறுமிமீது இராணுவச் சிப்பாய் பாலியல் துஷ்பிரயோகம்

(மன்னார்)

மன்னாரில் 14 வயதுச் சிறுமி ஒருவரை இராணுவச் சிப்பாய் ஒருவர் பற்றைக் காட்டுக்குள் கூட்டிச் சென்று துஷ்பிரயோகம் செய்துள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, மன்னார் பனங்கட்டிக்கோட்டு மேற்கு கிராமத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமியுடன் சௌத்பார் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் காதல் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் கடந்த 10 ஆம் திகதி குறித்த சிறுமியை குறித்த இராணுவ சிப்பாய் சௌத்பார் இராணுவ முகாமிற்கு முன்னால் உள்ள பற்றைக்காட்டினுள் கூட்டிச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

குறித்த சம்பவத்தை அப்பகுதியைச் சேர்ந்த இருவர் நேரடியாகக் கண்டுள்ளனர். குறித்த சிறுமியை குடும்பத்தினர் வவுனியாவிற்கு அழைத்துச் சென்று வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் பிரஸ்தாப சிறுமி தனக்கு நடந்தவற்றை வைத்தியர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சிறுமியின் பிரசசினை தொடர்பாக வவுனியா வைத்தியசாலைத்- தரப்பினர் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கினர்.

இந்த நிலையில் குறித்த சிறுமியின தாய், மன்னார் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார். இந்த நிலை 19 ஆம் பக்கம் பார்க்க....

## இரு ஆலோசகர்கள் மேலும் நியமனம்

(கொழும்பு)

இலங்கையில் போரின்போது காணாமல் போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனைவழங்குவதற்காக மேலும் இரண்டு வெளிநாட்டு பிரதிநிதிகள் நயமிக்கப்பட்டுள 20 ஆம் பக்கம் பார்க்க....

## 150 சிறுவர்களை அவுஸ்.விடுவிப்பு

(கான்பெரா)

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரியதை அடுத்து, அங்கு தடுத்து வைகைகப்பட்டுள்ள சுமார் 150 சிறுவர்களை விடுவிப்பதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

பத்து வயதுக்கும் குறைவான சிறுவர்கள் மற்றும் 19 ஆம் பக்கம் பார்க்க....

## அகதி அந்தஸ்தில் கவனம் தேவை - இலங்கை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான நிறுவனம் (யு.என்.எச்.சி.ஆர்) வெளிநாட்டு வாழ் இலங்கை மக்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குவதில் எச்சரிக்கையாக இருக்க வேணடும் என அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

போர் முடிந்த நிலையில் மலேசியாவில் பதுங்கியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளை மலேசிய அரசாங்கம் அடையாளம் காட்டியதாக ஜெனிவாவிலுள்ள ஐ.நாவுக்கான வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், பல இடங்களில் இவ்வாறு சந்தேகப்பட்டு கைது செய்யப்பட்ட நபர்கள் தொடர்பாக விசாரணை நடத்தியதில் அவர்கள் ஐ.நா அகதிகள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட அகதி அடையாள அட்டை பெற்றவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பாதுகாப்பு கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆரியசிங்க மேலும் கூறுகையில்,

தமிழீழ விடுதலை புலிகள் வெளிநாட்டில் இன்னும் செயற்பட்டு வருவதாகவும், இதனால் ஐக்கிய நாடுகள் அகதிகள் அந்தஸ்து வழங்குவதில் எச்சரிகையாக இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உதிரம் உதிர்ந்த இறுதி வணக்கங்கள்

## சின்னத்துரை வரதராஜன்



கனி உதிர்ந்த மரம் ஒன்று கருகியதோ
கரையேற்றிய படகு ஒன்று கவிழ்ந்ததோ
வரதன் என்கின்ற நாமம் வரலாறாகியதோ?
வீரம் கொழித்த வன்னி மண்ணில்
விடுதலைக்கு வலு சேர்ப்பதற்காய்
நெருப்பாற்றில் நீந்தி விளையாடி
எதிரிகளிடம் அகப்பட்டும் சிதைந்து
போகாத – நீ
இன்று மறைந்து போனதன்
மர்மம் என்ன? மாமனிதா!
உன் கிளையில் விழுது பரப்பியோர்
பல்லக்கில் ஏற்றி தரணி எங்கும்
பவனி வந்து உன் புகழை பாட
நீ பாடையிலே ஏறி பரலோகம்
பறந்து செல்ல யார் உனக்கு
நாள் பார்த்தார்?

பிரபல பொருளியல் ஆசிரியரும், தமிழ்த் தேசியவாதியும் யாழ் எய்ட் இன் ஆலோசகரும், கலிங்கம் இதழின் செயற்குழு உறுப்பினரும், DCM நிறுவன நிர்வாக இயக்குநருமான சின்னத்துரை வரதராஜனுக்கு உதிரம் உதிர்ந்த இறுதி வணக்கங்கள்.

கலிங்கம் யாழ் எய்ட்
சமூகம்.

(7453)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுளைக் கணித்த போப்பாண்டவர்

77 வயதான போப் பாண்டவர் பிரான்சிஸ் 5 நாட்கள் யணமாக தென்கொரியா சென்று இருந்தார். தனது பயணம் முடிந்து வாடிகன் நகருக்கு தனிவிமானத்தில் புறப்பட்டார்.

இதன்போது விமானத்தில் நிருபர்களுக்குபேட்டி அளித்த போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

எனது இந்த பயணத்தின் போது மக்களின் பெருந் தன்மை தெரிந்தது. நான் எனது பாவங்க ள், தவறுகள் குறித்து அறிய முயன்றேன். அதற்காக பெருமைப் படவில்லை.

ஏனெனில் நான் இன்னும சில காலம் மட்டுமே அதாவது இன்னு ம் 2 அல்லது 3 ஆண்டுகள் மட்டுமே உயிருடன் இருப்பேன். அதுவரை மட்டுமே கடவுள் எனக்கு ஆயுள் வழங்கியுள்ளார். அதற்குள் ஓய்வு பெறவும் வாய்ப்பு உள்ளது.

போப்பாண்டவரான போது இயற்கையாகவே எனக்கு பாப்புலாரிட்டி கிடைத்தது. தொடக்கத்தில் அது எனக்கு சிறிய அளவில் ஒருவித பீதியை ஏற்படுத்தியது.

போப்பாண்டவர் பொறுப்பில் இருந்து ஓய்வு பெறுவது சாத்தியமே. ஏனெனில் எனக்கு முன்பு கடந்த ஆண்டு பெனடிக்ட் அப்பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். தொடர்ந்து நீண்ட நாள் பணியாற்ற முடியாது என கருதியதால் பணியில் இருந்து விலகினார். 60 ஆண்டுகளுக்கு முன்பு கத்தோலிக்க பிஷப்புகள் ஓய்வு பெறுவது என்பது நடைமுறையில் கேள்விப்படாத ஒன்றாக இருந்தது. தற்போது அது சாதாரணமாகி விட்டது.

அதற்கான கதவை 16 ஆம் பெனடிக்ட் திறந்து விட்டார் என்றார்.

மேலும், அவர் கூறும்போது, "நரம்பு கோளாறினால் மிகவும் அவதிப்படுவதாகவும், அதற்கு சிகிச்சை தேவை. தற்போது ஆர்ஜென்டீனாவில் இருந்து வரவழைக்கப்பட்ட டீம் தனது நரம்புகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறது என்றும் நகைச்சுவையாக தெரிவித்தார். (இ)

# விபத்தில் சிக்கியவரின் கால் முறிந்தது!

(அளவெட்டி )

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் கால் முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் சுன்னாகம் பகுதியில் நேற்று முற்பகல் 10.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது

யாழ்ப்பாணத்தில் இருந்து சுன்னாகம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் கே.கே.எஸ். வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுமே மோதி இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் காயமடைந்தவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர் தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-25)


## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளிப் பகுதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்த பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0776181216 (7434)


## வலம்புரி- சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

**வடமாகாணத்தில்**

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- முல்லைத்தீவு
- வவுனியா
- மன்னார்

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலை முடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டுவந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வடபிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள- நேர்மையுடன் பணியாற்றக்கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ. இல, தொலைபேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக் கூடிய, உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக, சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல.3,2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 21.08.2014**

குறிப்பு:-நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும்

**பிரதம ஆசிரியர், வலம்புரி**

# 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

## செல்வி மங்கையர்க்கரசி பொன்னம்பலம் [மங்கை]

மலர்வு குப்பிளானில் 23.08.1978 உதிர்வு லண்டனில் 20.08.2003



அன்பின் திருவுருவாய் பாசத்தை பொழிந்த
இனிய இளைய அழகு மகளே! மங்கையே!
ஆண்டுகள் பதினொன்று ஆனாலும் ஆறுமோ
எம் துயர் தான் உன் நீங்காத நினைவுகளை
மனதில் சுமந்தபடி



உன் நினைவில் வாழும்
அப்பா, அம்மா, அண்ணன்மார்,
அக்காமார்.

குப்பிளான் தெற்கு
தொடர்புகளுக்கு:
077 8526152

பொன். மணிவாசா (7280)

# இராசி பலன்

**20.08.2014**
**(ஆவணி 04, புதன்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு**
**தசமி பிற்பகல் 12.04 மணிவரை**
**மிருகசீரிடம் முன்னிரவு 7.40 மணிவரை**
**இராகுகாலம் 12.05-1.35 மணிவரை**
**சுபநேரம் 04.35-06.05 மணிவரை**

**வளவன்**

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், உடன்பிறப்புகளின் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறும், பகையொன்று நட்பாகலாம், புதிய பொருட் சேர்க்கைகள் உண்டு.

**இடபம்:** உறவினர்களின் சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் நன்மை தரும் தகவல்கள் வந்து சேரலாம்,வருமானம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், வியாபார நலன் கருதி புதிய முயற்சி எடுப்பீர்கள், சயன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்:** ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படும், சோம்பலை தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்:** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் சந்திப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** திடீர் பயணங்களால் நன்மை உண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**விருச்சிகம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடக்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, பிரயாண பயமுண்டு, குடும்பத்தில் சில மாற்றங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** தேகாரோக்கியம் சீராகும், கனிவான பேச்சுக்களால் காரியம் சாதித்துக் கொள்வீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வீட்டை அழகு படுத்தும் எண்ணம் மேலோங்கும், வியாபார விருத்தியுண்டு, காரிய இடையூறுகள் ஏற்படலாம்.

**மீனம்:** புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, பயணங்களால் பலன் உண்டு, தாய்வழி உறவினர்களால் சுபசெய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பப் பெண்ணை தாக்கியவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பகுதியில் குடும்ப பெண்ணொருவரை தாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நிதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதோடு அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,


நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலையில் 'நபர் குறித்த பெண்ணின் வீட்டிற்கு சென்று தாக்கியுள்ளார்.

இதனால் தலையிலும், கையிலும் பலத்த காயங்களுக்குள்ளான குறித்த பெண் காயமடைந்த நிலையில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறையிட்டதுடன் பொலிஸாரினால் மந்திகை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார்.

இதேவேளை குறித்த சந்தேக நபரினை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிபதி முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

இதன்போது குறித்த சந்தேக நபரினை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-60)

நன்றி-மிரர்




# சித்தர் பெரிய சந்நியாசியார் திருவுருவச்சிலை திறப்புவிழா

(புன்னாலைக்கட்டுவன்)

யாழ்ப்பாணம், இணுவில் சித்தர் பெரிய சந்நியாசியார் திருவுருவச்சிலை திறப்பு விழா இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இணுவில் கந்தசுவாமி ஆலயத்திற்கு பெருமை சேர்க்கும் நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த உலக பெரு மஞ்சத்தை தந்தருளியவரும் பல ஊர் அடியவர்களுக்கு தனது அருட்பார்வையினால் தீராத நோய், பிணிகளைத் தீர்த்தவரும் நூற்றாண்டுக்கும் பூசித்து வணங்கப்படும் பெரும் மகான் இணுவை சித்தர் பெரிய சந்நியாசியாரின் இந்திய சிற்பியினால் புதிதாக உருவாக்கப்பட்ட குறித்த திருவுருவச் சிலை இணுவில் கிழக்கு அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத் துக் கொண்டு வரப்பட்டு இணுவில் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக ஸ்தாபிக்கப்படவுள்ளது.

எனவே இந்நிகழ்விற்கு அனைத்து அடியவர்களும் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (இ-78)

# தாக்குதலுக்குள்ளான இளைஞன் வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)

தாக்குதலுக்குள்ளான இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 6 மணியளவில் நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டாய் மாலுசந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த துரைராசா சசிதரன் (வயது - 28) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை அன்றையதினம் மதியம் 12.30 மணியளவில் மாலு சந்தியில் அமைந்துள்ள கட்டப்பிராய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை ஊழியரான காயமடைந்த சசிதரனின் உறவினர் ஒருவரை குறித்த குழுவினர் தாக்கிச் சென்றதாக தாக்கப்பட்ட குமாரசாமி தீபராஜ் (வயது - 28) என்பவர் நெல்லியடி பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

# வயோதிபருக்கு தலையில் காயம்

(கரணவாய்)

யாழ்.பருத்தித்துறை கந்தருடையார் சந்தியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை துவிச்சக்கர வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபர் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனார்.

இதில் கற்கோவளம் பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வமாணிக்கம் அப்புத்துரை (வயது 65) என்பவரே இவ்வாறு விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-60)

சாய்ந்துவிட்ட பொருளியலின் இமயத்திற்கு எம் இதய அஞ்சலிகள்



மூத்த புகழ் பூத்த பொருளியல் பேராசானும்
எமது கல்வி நிலையத்தின் ஸ்தாபகருமான
அமரர் S.வரதராஜன் அவர்களிற்கு
எமது இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின்
பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!
DCM சமூகம்
(C-8245)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532
valampurii@yahoo.com

# குருபூசை தினம்

ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தின் மூன்றாவது குரு பீடாதிபதி ஸ்ரீமத் கனகரத்தினம் சுவாமிகளின் குருபூசை இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஸ்ரீ சிவகுரு நாத பீட வேதாந்த மடத்தில் இடம் பெறவுள்ளது.

திருமுறை விண்ணப்பத்துடன் ஆரம்பமாகி அபிடேக ஆராதனையுடன் இடம்பெறவுள்ள இக்குருபூசையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு குருபீடாதிபதி ஸ்ரீவேத வித் ஸ்ரீயாசாகரர் சுவாமிகள் கேட்டுக் கொண்டுள்ளார். (இ




# சங்காபிஷேகமும் மலர் வெளியீடும்

(கொடிகாமம்)

புராதன வரலாற்று சிறப்புமிக்க தென்மராட்சி வரணி அருள்மிகு சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி தின கால சங்காபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இ.குமாரசாமி குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போது அம்பிகை விஷேட அலங்காரத்துடன் வீதி உலா வந்து அருள்பாலிக்கவுள்ளார்.

அன்றைய தினம் ஆலய வரலாறு அடங்கிய மலர் வெளியீடு இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-272)

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 15.05.1952
விண்ணில் 17.08.2014

**சிற்றம்பலம் மாணிக்கவாசகர்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

உருவத்தால் சிறுத்தாலும் உள்ளத்தால்
பெருந்தகையீர்
எம்மோடு நீர் வாழ்ந்த காலத்தை
மீட்டுப் பார்க்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோப்பாய்க் கோட்ட அதிபர்கள் சங்கம்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
பணியாளர்கள்.
(இ-3246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 440 ஹெக்டேயரில் இம்முறை யாழில் வெங்காயம் அறுவடை

## விவசாயத் திணைக்களம் தகவல்

யாழ். மாவட்டத்தின் வெங்காய அறுவடை தற்சமயம் வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளத ால் நாட்டின் பல பாகங்களிலும் சின்ன வெங்காயம் தாராளமாகவும் சாதாரண விலையிலும் கிடைக்கத் தொடங்கியுள்ளது.

கோப்பாய், சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, இளவாலை போன்ற யாழ். மாவட்டத்தின் பல பிரதேசங்களில் வெங்காய அறுவடை இடம்பெற்றுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இம்முறை 440 ஹெக்டேயரில் வெங்காய அறுவடை இடம் பெற்றுள்ளதாக விவசாயத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அறுவடை செய்யப்பட்ட யாழ்.வெங்காயம் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கும் கொண்டுவரப்பட்டு நாட்டின் பல பாகங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டுவருகின்றன.

தனிமவுசு கொண்ட மக்களால் பெரிதும் விரும்பப்படும் யாழ். வெங்காயம் தற்சமயம் நியாய விலையிலும் தாராளமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தனியார் வியாபாரிகள் வாகனங்களு டன் நேரில் சென்று யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயத்தைக் கொள்வனவு செய்து வந்து வியாபாரம் செய்து வருகின்றனர்.

முக்கிய நகரங்களிலும், பிரதான வீதிகளிலும் இவ்வாறு தனியே வெங்காயம் விற்பனை செய்வதில் பலர் ஈடுபட்டுள்ளனர். அவர்களால் ஒன்றரைக் கிலோ சின்ன வெங்காயம் நூறு ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஆனால் யாழ். மாவட்டத்தில் ஒரு கிலோ சின்னவெங்காயம் 50-60 ரூபா வரையும், ஒரு கிலோ பெரிய வெங்காயம் 70 ரூபா வரையிலும் கொள்வனவு செய்யப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-23)



நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் குழந்தை ம.சண்முகலிங்கம் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட கண்டனன் சீதையை எனும் இசை நாடகம் அண்மையில் சாலையடி பண்டத்தரிப்பு எனும் இடத்தில் இயங்கிவரும் மறுமலர்ச்சி மன்றத்தில் நடத்தப்பட்டபோது.

# தன்னைத் தானே வெட்டி காயப்படுத்திய வர்த்தகர்

வவுனியா வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் தனது வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு உள்ளே இருந்தவாறு தனது உடலைக் காயப்படுத்திய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வர்த்தகர் கடந்த சனிக்கிழமை மாலை தன்னை கத்தியால் காயப்படுத்தியுள்ளார். இத்தகவல் வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் அவ்விடத்திற்கு வந்து வெளியே நின்றவாறு கதவை திறக்குமாறு உள்ளே இருந்த வர்த்தக நிலைய உரிமையாளரிடம் கூறிய போது கதவை அவர் திறக்கவில்லை.

பின்னர் பொலிஸாரும் அருகிலிருந்த பொதுமக்களும் எடுத்த முயற்சியால் கதவு உடைக்கப்பட்டது. வர்த்தக நிலையத்திற்குள் சென்ற பொலிஸார் தன்னைக் காயப்படுத்தி விட்டு படுத்திருந்த வர்த்தக நிலைய உரிமையாளரை காப்பாற்றி உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தினை நேரில் பார்த்த ஒருவர் கூறுகையில், கடந்த 16 ஆம் திகதி 5 மணியளவில் மேற்படி வர்த்தகநிலைய உரிமையாளர் மது போதையில் இருந்தவாறு போத்தலை உடைத்து வெளியில் வீசி விட்டு பின்னர் கத்தி மற்றும் கண்ணாடி துண்டுகளால் தனது உடம்பு பகுதிகளை காயப்படுத்தி கொண்டிருந்தார்.

இந்நிலைமையில் நாங்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து பொலிஸார் வருவதை அவதானித்த மேற்படி வர்த்தகர் வர்த்தக நிலையத்தினை மூடிவிட்டு உள்ளே படுத்து விட்டார். பின்னர் பொலிஸார் மேற்கொண்ட முயற்சியில் மேற்படி வர்த்தகரை காப்பாற்ற முடிந்தது எனக்கூறினார். (2-250)

# சுவர் இடிந்து சிறுவன் மரணம்

(குருமன்காடு)

வவுனியா - ஓமந்தை கொந்தக்காரன் குளம் பகுதியில் மீள்குடியேறி இருந்த ஒருவரது வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் அதனுள் சிறுவன் அகப்பட்டு மரணமடைந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொந்தக்காரன் குளத்தைச்சேர்ந்த என்.தாரகன் (வயது4) என்ற சிறுவனே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, ஓமந்தை, கொந்தக் காரன் குளம் பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் மழை பெய்திருந்த நிலையில் வீட்டின் உட்பகுதியை நோக்கி மோட்டார் சைக்கிளை வீட்டு வாசல் ஊடாக ஏற்றிய போது, மோட்டார் சைக்கிள் கதவு நிலையுடன் மோதியதையடுத்து நிலையுடன் இணைந்திருந்த சுவர் இடிந்து விழுந்ததில் சிறுவன் அதனுள் அகப்பட்டு காயமடைந்துள்ளான்.

காயமடைந்த சிறுவன் உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் முயற்சி வெற்றியளிக்காது மரணமடைந்துள்ளான்.

இது தொடர்பான விசாரணைகளை ஓமந்தைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)


தேசியப் பற்றாளர்

அமரர்

# சி.வரதராஜன்



பல்லாயிரம் மாணவர்களை
வளப்படுத்திய
அரும் பொருளியலாளனே!

கொள்கையில் தடம்புரளா
தேசியப் பற்றாளனே!

துப்பாக்கி முனைக்கும்
எதிர்நின்று கருத்துரைத்த
தமிழ் உணர்வாளனே!

பிரிந்தாலும் பிரிக்கமுடியாத
நினைவுகளுடன்
உங்கள்
கனவுகள் நனவாக
எம் பணி தொடரும்...

பொ. ஐங்கரநேசன்

(சி-8243)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 34 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில் A/L (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/1732 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 7 ¾ செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBA, MA / அரச பதவிநிலை உத்தியோகத்தர்<br>தொ.இ: G/2583 |
| பிறப்பு: 1986 கிறிஸ்தவம் (RC)<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / மேற்பார்வையாளர்<br>தொ.இ: B/1733 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 34 ¾ செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2586 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 6 ¾<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L / வியாபாரம்<br>தொ.இ: B/1736 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 42 ¾ செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/2590 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 9 ½<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி / ஆசிரியர்<br>தொ.இ: B/1739 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 7 ¼ செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc / Lab (கனடா PR)<br>தொ.இ: G/2592 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலை

# பணியாளர்கள் 47,000 பேர் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்

சுகாதார ஊழியர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமையை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள 47 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வைத்தியசாலை ஊழியர்கள் இன்று முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

அத்தோடு இதனை முன்னிலைப்படுத்தி கண்டன ஆர்ப்பாட்டமும் இடம்பெறவுள்ளது. இப் பணிபகிஷ்கரிப்பை சுகாதார ஒன்றிணைந்த ஊழியர் சங்கமும் இலங்கை சுவசேவை சங்கமும் நடத்தவுள்ளன. இச் சங்கங்கள் வெவ்வேறு சங்கங்களாக கருதப்படுகிறது.

சுகாதார ஊழியர்கள் நீண்டகாலமாக முகங்கொடுத்து வரும் சம்பள நிலுவை, சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்ற பிரச்சினைகள் தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தீர்வு வழங்குவதாக உறுதியளித்த போதிலும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் இது தொடர்பில் கவனயீனமாக செயற்படுகின்றனர்.

எனவே இப்பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டும். இதனடிப்படையிலேயே இன்று புதன்கிழமையும் நாளையும் நாளை மறுதினமும் வைத்தியசாலை ஊழியர்கள் 47 ஆயிரம் பேர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இதனூடாக நோயாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு சுகாதார அதிகாரிகளே பொறுப்பாகும் எனவும் அறிவித்துள்ளனர்.

இதேவேளை இலங்கை சுவசேவை சங்கம் கடந்த 13 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்த போராட்டமொன்றை மேற்கொண்டது. இதற்கமைய இலங்கை சுவசேவை சங்கம் இன்று முதல் தொடர்ச்சியாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# 1919 அதிக அழைப்பு

(கொழும்பு)

அரச சேவைகள் தொடர்பான தகவல்கள் பொது மக்களுக்கு வழங்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட 1919 என்ற அரச தகவல் நிலையத்திற்கு பெரும் எண்ணிக்கையிலான அழைப்புக்கள் இதுவரை கிடைத்துள்ளதாக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையம் ஆரம்பத்திலிருந்து இதுவரை 80 இலட்ச த்திற்கும் அதிகமான அழைப்புக்கள் கிடைத்திருப்பதுடன் குறுஞ் செய்தியூடாக வும் தகவல்களைப் பெற்றுக் கொள் ளக் கூடிய வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கும் முகவர் நிலையம் மக்கள் கூடுதலாக புகையிரத சேவை பிரதேச செயலகம், பொலிஸ் திணைகளம், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம், குடிவரவு குடியகல்வு திணைக்களம், கல்வி அமைச்சு பரீட்சைகள் திணைக்களம் போன்றவற்றின் தகவல்களைப் பெறும் பொருட்டே அழைப்புக்களை பரிமாறியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது. . (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 240 |
| தக்காளி | 60 | 60 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 40 | 60 |
| கோவா | 80 | 60 | 80 |
| கரட் | 80 | 100 | 120 |
| பூசணி | 20 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 60 - 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 60 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 70 | 120 |
| பயற்றங்காய் | 40 | 80 | 60 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 |
| பீற்றூட் | 40 | 60 | 80 |
| கறிமிளகாய் | 60 | 130 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 30 | 80 |
| போஞ்சி | 100 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | 50 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25 - 30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 |

# தமிழ் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக இன்று புதன்கிழமை கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தவுள்ளதாக முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் தெரிவித்தார்.

முற்போக்கு தமிழ்த்தேசிய கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகளை பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிகையை முன்வைத்து இந்தப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

போராட்டத்தின் முடிவில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்குமாறு எமது கட்சிசார்பான மகஜர் ஒன்றையும் மாவட்ட செயலகத்தில் கையளிக்கவுள்ளோம்.


விடுதலைப் புலிகளின் தலைவர களாக இருந்தவர்கள் இன்று அரசில் இணைந்து சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர். அத்துடன், ஜே.வி.பி போன்ற பெரிய கட்சிகளுக்கு அரசு பொது மன்னிப்பு வழங்கியுள்ளது.

இந்நிலையில் தமிழ் அரசியல் கைதிகளும் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட வேண்டும். இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைத்துக் கட்சிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 111


டொறின் மன்மதநாயகம்

கிளி ஜோசியத்தில் நம்பிக்கை இல்லை...



ஆனாலும் பார்க்கிறேன் கிளியின் ஒருநிமிட சுதந்திரத்திற்காக...

டியேமௌலி ஏகாம்பரநாதன்



குமாரசாமி ரமணன்



"காதுகிட்டே வந்து முணுமுணுக்காதேடா... கெட்ட பழக்கம்! என்ன விஷயம்னு உரக்கச் சொல்லு...!"

"காபி குடிங்கன்னு அவர்கிட்ட சொல்லித் தொலைக்க வேணாமாம்... வீட்டில் பால் கிடையாதாம்... அம்மா சொல்லச் சொன்னாங்க...!"

ஜெயந்தன் பாலசுந்தரம்

கால் கொடுத்தவன் – வரம் கொடுத்திருந்தால் கல்விச்சாலைக்கு போயிருப்பான் இந்த சிறுவன்!



கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்

காதல் திருமணத்திற்கும் நிச்சயிக்கப்பட்ட திருமணத்திற்கும் என்ன வித்தியாசம்?



நாமளா கிணத்தில் விழுந்தா... அது காதல் திருமணம். பத்து பேர் சேர்ந்து தள்ளி விட்டா... அது நிச்சயிக்கப்பட்ட திருமணம்.

ஜெயந்தன் பாலசுந்தரம்

கடவுளை நம்புவது ஒருவித நம்பிக்கை. ஆனால் கடவுளை மட்டுமே நம்புவது மூட நம்பிக்கை.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் எபோலா!

## இந்தியா சென்று திரும்பிய பெண்ணின் மரணத்தால் சந்தேகம்

உலகை ஆட்டிப்படைத்து கொண்டிருக்கின்ற எபோலா வைரஸ் தொற்றுக்கு உள்ளான இலங்கையைச்சேர்ந்த ஒருவர் மரணமடைந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

அவரது சடலத்திலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்ப ்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கண்டி, ரிக்கில கஸ்கடையைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ வாறு மர ணமடைந்துள்ளார். இவருக்கு எபோலா வைரஸ் தொற்றியிருக்கின்றதா? என்பது தொடர்பில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் மரணமடைந்த அந்த பெண், சில வாரங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு சென்று திரும்பிய நிலையிலேயே திடீரென மரணமடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவருடைய சடலம் தாங்கிய சவப்பெட்டி சீல் வைக்கப்பட்ட நிலையில் சுமார் எட்டு அடி குழி தோண்டி புதைக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (இ)

# 18 ஆண்டுகளுக்கு முன் கடத்தப்பட்ட வான் மீட்பு

## விடுதலைப்புலிகள் கடத்தியதாக பொலிஸார் தகவல்

(கொழும்பு)

சித்தாண்டிப் பகுதியில் வைத்து 18 வருடங்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட வானொன்று கொழும்பில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தபோது கடந்த ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தேக நபர்கள் இருவரை கைதுசெய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வான் 18 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா, வெலிவேரியாப் பகுதியில் உள்ள பாதையோரத்தில் வாகன விற்பனைச் சந்தை ஒன்றிலேயே இந்த வான் கைப்பற்றப்பட்டுள்ளது,

இந்த வானை விற்பனைக்கு வைத்திருந்ததாகக் கூறப்படும் நபரும் வாகனப் பதிவுப் பெயரை மாற்றுவதற்கு விண்ணப்பித்திருந்த நபருமே கைதுசெய்யப்பட்டனர்.

இந்த வாகனத்தை விற்பனை செய்தவரை தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# ஒழுங்கமைப்புக்கு அப்பால் சென்று செயற்படக் கூடாது

## அரசசார்பற்ற நிறுவனங்கள் குறித்து அரசு

(கொழும்பு)

இலங்கையில் செயற்படும் சில அரச சார்பற்ற அமைப்புக்கள், ஒழுங்கற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதால் நிதி முகாமைத்துவத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான பாதுகாப்பு மாநாட்டில் அவர் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

அரச சார்பற்ற அமைப்புக்கள் தமது ஒழுங்கமைப்புக்கு அப்பால் சென்று செயற்படக்கூடாது என்று அண்மையில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதன்காரணமாக அரச சார பற்ற அமைப்புக்கள், ஊடகவியலாளர்களுக்கான செயல் அமர்வுகள், செய்தியாளர் சந்திப்புக்களை நடத்தக்கூடாது என்று அந்த அமைச்சு கோரியிருந்தது.

கப்பல், விமானம் என்றில்லாமல் உலக பொருளாதாரத்துக்கும் பயங்கரவாதம் இன்று பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ)

# தனியார் கல்வி நிறுவனங்களை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தல்

தமிழ் - சிங்கள வகுப்புக்களை நடத்தும் அனைத்து தனியார் கலவி நிலையங்களையும் அரச கரும மொழித் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அரச கரும மொழிகளான தமிழ், சிங்கள கல்வி நிலையங்களையும் அதன் ஆசிரியர்களையும் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தவே இந்தப் பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என திணைக்களத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 29 ஆம் திகதி வரை நிறுவனங்களை பதிவு செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### தெய்வீக இசையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளம் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல் லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய தினம் இடம் பெறவுள்ள இசையரங்கத்தில் பாடல் திருமதி பங்கயச்செல்வி முகுந்தனும் வயலின் எ.ஜெயராமனும் மிருதங்கம் திருமதி கானகோகிலம் ஜெயமும் கெஞ்சிரா ரி.சண்முகமும் வழங்கவுள்ளனர்.

### ஆன்மீக அருளுரை

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வழங்கப்பட்டு வருகின்றது இன்றைய தினம் மன ஒருமைப்பாடு எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

### தெய்வீக கலையரங்கு

நல்லூர்மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் தெய்வீக கலையரங்கு தினமும் மாலை 4 மணி தொடக்கம் 5.30 மணிவரை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது.இன்றைய நிகழ்வாக யா/உசன் மகாவித்தியாலய மாணவர்களின் நடன நிகழ்வும் யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை மாணவியின் இசைக்கச்சேரியும் யா/எழுது மட்டுவாழ் அ.மி.தக. பாடசாலை ஆசிரியர்கள் வழங்குபுராண படனமும் இடம்பெறவுள்ளன.

### இசைப்பேருரை

நல்லூர்க்கந்தனின்மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இடம் பெற்று வருகின்ற கம்பராமாயண இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ. சிவ.வை. நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் அனுமன் தூது எனும் தலைப்பிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

### இசை நிகழ்ச்சி

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையினால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம் பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வில் திருமதி விஜிதா பரணிதர சர்மா வழங்கவுள்ள வீணை இசை இடம்பெறவுள்ளது.

### ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.


இன்றைய தினம் சைவப்புலவர் எஸ். கெ. என்.தவராசா வழங்கும் மனித வாழ்வும் ஆன்மீகமும் எனும் தலைப்பிலான சொற்பொழிவும் சுழிபுரம் கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை,மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, வரணி சிட்டிவேரம் ஸ்ரீ கண்ணகி அம்மன் அறநெறிப் பாடசாலை,மாசியப்பிட்டி ஸ்ரீ பராசக்தி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இன்றைய விசேடநிகழ்வாக திருமதி புஷ்பமலர் யோகாரயனின்மாணவர்கள் வழங்கவுள்ள இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

### வழக்காடு மன்றம்

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சிறி நதியா நகை மாளிகையின் அனுசரணையில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையில் குற்றவாளிக் கூண்டில் தருமர் எனும் தலைப்பிலான வழக்காடு மன்றம் இன்று இரவு 7 மணிக்கு நல்லூர் பரமேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ)

# நல்லூரான் திருவடிக்கு இன்று கைலாசவாகனத் திருவிழா



# நல்லைக் குமரனே போற்றி



அன்பர்க்கு அன்பனே போற்றி
ஆறுபடை வீடு கொண்ட அழகனே போற்றி
இனிய வடிவேலவனே போற்றி
ஈசன் மகனே போற்றி
உலகை ஆளும் உமை மைந்தனே போற்றி
ஊனமதை நீக்கும் உத்தமனே போற்றி
ஓங்காரப் பொருளானவனே போற்றி
ஔடதமாய் வந்திடும் நல்லைக் குமரனே போற்றி

க.பிரணவன்(யா/மூளாய்.சைவ.வித்தியாலயம்)

# நல்லூர்ப்பதி பாமாலை



தமிழ் மன்னன் சங்கிலியன் ஆண்ட பதி யிதுவே
தரமோடு தமிழர்கள் வாழ்ந்த பதி யிதுவே
அமிழ் தான தமிழ் கடவுள் அமர்ந்த பதி யிதுவே
அரகரா எனுமோசை கேட்கும் பதி யிதுவே
புகழ் சேரப் பாமாலை பாடும் பதி யிதுவே
புனிதமொடு பக்தர்கள் பரவும் பதி யிதுவே
கமழ் மலர்கள் தொடுமாலை நிறையும் பதி யிதுவே
கந்தனருள் ஆட்சி நிறை நல்லூரெனும் பதியே

கலைஒளிமயில்.வேலாயுதபிள்ளை
(புளியம்பொக்கணை)

# நல்லை நகர்க் கந்தா வாராய்



நல்லை நகர் கந்தா வாராய்
கருணை மழை பொழிந்தே வாராய்
நிலையான அருளைத் தந்து
விளையாடும் முருகா வாராய்
சுந்தர முகத்தில் கந்தா
உந்தன் விழி விந்தை கண்டேன்
சுடராக வந்துதித்தாய் –எமக்கு
சுபங்கள் யாவும் தருவாய் ஐயா!

செ.பவானந்தமூர்த்தி(இணுவையூர்)

# அருள் தரும் ஆண்டவா



நல்லையில் குடியமர்ந்து
தொல்லையெல்லாம் தீர்ப்பவனே
எல்லையில்லா அருள் புரிந்து
ஏழை யெமை காப்பவனே
பொய்கையில் பிறந்தவனே
செய்கையில் வல்லவனே
ஆறிரு கைகளினால்
அருள்தரும் ஆண்டவனே
அண்டினோம் நாம் இன்று
வேண்டினோம் தாவென்று

ம.சங்கர் (உடுவிலூர்)

# நல்லைப் பெருமான் பதி

நல்லூர் எனவுலகோர் நாவால் நயந்துரைக்க
வல்ல குருவாக வந்தமைந்து–எல்லவர்க்கும்
தொல்வினை போக்கித் தொடர்வினைநீக்குமன்றோ
நல்லை பெருமான் பதி

திருவருள் ஜோதி ஆ.வடிவேலு

# நல்லைக் கந்தன் நனிவெண்பா

நல்லூரான் திருவடியை நாடித் தொழுவென்று
சொல்லவந்த யோக சுவாமிக்கும்–நல்ல வரம்
ஏற்றினான் நல்லூ ரெழிற்குமரன் கருணையினைச்
சாற்றவுண்டோ வார்த்தைச் சரம்

கலாபூஷணம் சந்தக் கவிஞர்
நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

898


....ஒருவனை அரசன் முதலில் கௌரவப்படுத்திவிட்டு, பிறகு அவனைக் கண்ணியக் குறைவாக நடத்தினால் அவன் நல்ல குலத்தில் பிறந்தவனானாலும் அரசனை ஒழிக்கவே அதற்குப் பிறகு அவன் ஆவலோடு இருப்பான்.

## நரியும் போர் முரசும்!

மகிழ்ச்சி அடைந்தது. எனக்கு அதிர்ஷ்டம் காத்திருக்கிறது. இந்த எருதைப் பயன்படுத்திக்கொண்டு சண்டை மூலமோ, சமாதானத்தின் மூலமோ பிங்களகனை என்வசப்படுத்திக் கொள்கிறேன் என்று மனதுக்குள் அது தீர்மானித்துக் கொண்டது பிங்களகன்.

ஆம் தங்கள் அருளால் பார்த்தேன்.

உண்மையாகவா?



ஆகவே, அவனுடைய நோக்கத்தை அறியும் பொருட்டு, வேறு இடத்துக்குப் போய்க் காத்திருப்போம். ஒருவேளை நம்மைக் கொல்வதற்காக அந்த மிருகத்தை தமனகன் அழைத்து வந்தாலும் வரலாம். ஒரு பழமொழி இவ்வாறு கூறுகிறது:

ஒருவனை எளிதில் அப்படியே நம்பிவிடும் பலசாலியைப் பலவீனனும் வென்றுவிடுகிறான். அப்படி எளிதில் நம்பாத பலவீனனைப் பலசாலியாலும் வென்றுவிட இயலாது.

இவ்வாறு தனக்குள் சிந்தித்தபடியே பிங்களகன் வேறு இடம்சென்றது. அங்கிருந்தபடி தமனகன் போன வழியைப் பார்த்துக்கொண்டே தன்னந் தனியே நின்றுகொண்டிருந்தது.

சஞ்சீவகன் அருகில் நெருங்கிச் சென்று அது ஒரு எருதுதான் என்பதைத் தெரிந்துகொண்டதும் தமனகன் டது.

அரசன் தொடர்ந்து சங்கடங்களில் அகப்பட்டுக் கொண்டால்தான் அமைச்சர்கள் நன்மை அடைகின்றனர். அதனால்தான் எப்பொழுது பார்த்தாலும் அரசனுக்குச் சங்கடங்கள் இருந்து கொண்டே இருக்க வேண்டும் என்று அமைச்சர்கள் ஆசைப்படுகின்றனர்.

ஆரோக்கியமாக இருப்பவன் மருத்துவனைத் தேடமாட்டான். அதேபோல் சங்கடங்கள் இல்லாத அரசன் அமைச்சனை நாடுவதில்லை.

இவ்வாறு எண்ணிக்கொண்டு தமனகன் பிங்களகனிடம் திரும்பிச் சென்றது. பிங்களகன் அதைப் பார்த்ததும் தன் முகபாவத்தை மறைத்துக்கொண்டு முன்போலவே நின்றுகொண்டது. தமனகன் அதை வணங்கிவிட்டு அதற்கு சிறிது தூரத்தில் உட்கார்ந்தது.

நண்பனே! அந்த மிருகத்தைப் பார்த்தாயா? என்று மிகவும் ஆவலோடு கேட்டது பிங்களகன்.

ஆம். உண்மையாகத்தான். தங்களிடம் வேறுவிதமாகச் சொல்வேனா?

சிறு பொய்யானாலும் அதை அரசன் முன் ஒருவன் சொன்னால் அதனால் சொல்லுகிறவன் வழிபடும் தெய்வத்துக்கும் குருவுக்கும் அழிவு உண்டாகும். அரசனைத் தெய்வம்போல மதிக்க வேண்டும் என்று பண்டைய முனிவர்கள் கூறுகின்றனர். ஆகையால் அரசனிடம் பொய் சொல்லவே கூடாது.

அரசனுக்கும் தெய்வத்துக்கும் உள்ள வேறுபாடு இதுவே. செய்யக்கூடிய நன்மை தீமைக்கு உண்டான பலனை அரசன் அப்பொழுதே அளிப்பான்; தெய்வமோ இறுதியில்தான் அளிக்கும்.

சரி உண்மையில் நீ அதைப் பார்த்ததாகவே இருக்கட்டும். சிறியோரிடம் பெரியோர் கோபம் கொள்வதில்லை என்றது பிங்களகன்.

வளைந்து குனியும் நாணலைச் சூறைக் காற்று பிடுங்கி எறிவது இல்லை. ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்களையே அது வேரோடு சாய்க்கிறது. அதுபோல் பெரியோர்கள் பெரியோர்களிடத்திலேதான் தங்களுடைய வலிமையைக் காட்டுவார்கள் என்றது பிங்களகன் தொடர்ந்து.

அதைக் கேட்ட தமனகன், தாங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று எனக்கு முன்னரே தெரியும். பேச்சை வளர்ப்பானேன்? அந்த மிருகத்தையே தங்கள் முன் அழைத்து வந்து நிறுத்தட்டுமா என்று கேட்டது.

அதைக் கேட்ட பிங்களகன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. அழைத்து வருவதற்கு தனக்கு சம்மதம் என்ற பாவனையில் திருப்தியோடு அது அமர்ந்திருந்தது..............................

(தொடரும்)

## 08.2014 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 636 - அரபுப் படைகள் பைசண்டைன் பேரரசிடமிருந்து சிரியா, பாலஸ்தீனம் ஆகியவற்றைக் கைப்பற்றினர்.
- 1000 - ஹங்கேரி நாடு முதலாம் ஸ்டீபன் என்பவனால உருவாக்கப்பட்டது.
- 1866 - அமெரிக்க அதிபர் அண்ட்ரூ ஜோன்சன் அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததாக அதிகார பூர்வமாக அறிவித்தார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்சை ஜேர்மனியப் படைகள் கைப்பற்றின.
- 1917 - இலங்கையில் ஒரு ரூபாய்த் தாள் வழங்கப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ருமேனியா மீது சோவியத் ஒன்றியம் தாக்குதலை ஆரம்பித்தது.
- 1948 -"இலங்கை குடியுரிமை சட்டம்" இலங்கை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் 10 இலட்சம் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவளித் தமிழர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர்.
- 1953 - ஐதரசன் குண்டைத் தாம் சோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- 1960 - செனெகல் மாலிக் கூட்டமைப்பில் இருந்து விலகி தனி நாடாக அறிவித்தது.
- 1968 - பனிப்போர்: 200,000 வார்சா ஒப்பந்த நாடுகளின் படைகள் செக்கோஸ்லவாக்கியாவினுள் புகுந்தன.
- 1975 - நாசா வைக்கிங் 1 விண்கலத்தை செவ்வாயை நோக்கி ஏவியது.
- 1977 - நாசா வொயேஜர் 2 விண்கலத்தை ஏவியது.
- 1988 - ஈரான் ஈராக் போர்: 8 ஆண்டுகள் போரின் பின்னர் போர் நிறுத்தம் உடன்பாடாகியது.
- 1991 - எஸ்தோனியா சோவியத் ஒன்றியத்திலிருந்து விலகி மீண்டும் தனி நாடாகியது.
- 2006-அருட்தந்தை ஜிம் பிறவுண் காணாமல் போனமை, 2006: கத்தோலிக்க அடிகள் ஜிம் பிரவுண் மற்றும் அவரது உதவியாளர் விமலதாஸ் ஆகியோர் அல்லைப்பிட்டியில் காணமால் போனார்கள்.

### பிறப்புகள்

- 1847 - அன்றூ கிரீன்வூட், ஆங்கிலேயெத் துடுப்பாளர் (இ.1889)
- 1865 - பெர்னாட் டென்கிரேட், தென்னாப்பிரிக்கத் துடுப்பாளர் (இ. 1911)
- 1890 - எச். பி. லவ்கிராஃப்ட், அமெரிக்க எழுத்தாளர், கவிஞர் (இ.1937)
- 1910 - ஈரோ சாரினென், கட்டிடக்கலைஞர் (இ.1961)
- 1944 - ராஜீவ் காந்தி, இந்தியப் பிரதமர், (இ.1991)
- 1946 - நா. ரா. நாராயண மூர்த்தி, இந்தியத் தொழிலதிபர்
- 1951 - முகம்மது முர்சி, எகிப்திய அரசியல்வாதி, 5வது அரசுத்தலைவர்


### இறப்புகள்

- 984 - பதினான்காம் யோவான் (திருத்தந்தை)
- 1854 - பிரீடரிக் ஷெல்லிங், ஜெர்மன் மெய்யியல்லாளர் (பி. 1775)
- 1912 - வில்லியம் பூத், இரட்சணிய சேனையின் நிறுவனர்களில் ஒருவர் (பி. 1829)
- 1914 - பத்தாம் பயஸ் (திருத்தந்தை) (பி. 1835)
- 2006 - சி. சிவமகராஜா, ஈழத்து அரசியல்வாதி, பத்திரிகையாளர்
- 2013 - நரேந்திர டபுக்கர், இந்திய செயற்பாட்டாளர் (பி. 1945)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



...சர்வதேச கிரிக்கெட் அரங்கில் தென் ஆபிரிக்கா மீண்டும் சேர்க்கப்படவேண்டும் என்று ஐசிசியிடம் இந்தியா கடுமையாகப் போராடியதன் விளைவாக அந்நாடு மீண்டும் உலக நாடுகளுடனான கிரிக்கெட் போட்டிகளில் விளையாட சேர்க்கப்பட்டது. அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக தென் ஆபிரிக்கா ஒருநாள் போட்டிக்காக தனது முதற் சுற்றுப் பயணத்தை இந்தியாவில் மேற்கொண்டது. அவசர கதியில் இந்த சுற்றுப்பயணம் அமைக்கப்பட்டு இருந்ததால் இந்தியா தயாராவதற்கு முன்பே போட்டிகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. இத்தனைக்கும் அந்தமுறை சுற்றுப் பயணம் மேற்கொண்ட தென் ஆபிரிக்கா அணியில் திறமையானவர்கள் ஏனோ இடம் பெறவில்லை. தொடரை இந்தியா வென்றாலும் அது சுலபமாக இல்லாமல் கடுமையாகப் போராடித்தான். வெற்றிக் கனியைப் பறிக்க முடிந்தது.

கிரிக்கெட் விளையாட்டைக்கண்டு பிடித்து அதை முன்மொழிந்த நாடு இங்கிலாந்து என்றால் அதை வழிமொழிந்த நாடு ஆஸ்திரேலியா என்று சொல்லலாம். ஆனாலும் குருவை மிஞ்சிய சிஷியன் கதையாக இங்கிலாந்துக்கே அல்வா கொடுக்கும் வகையில் ஆஸ்திரேலியா கிரிக்கெட்டில் முந்திக்கொண்டது. பிராட்மென் ஒருவர் போதும். ஆஸ்திரேலியக் கிரிக்கெட்டிற்கு மட்டுமன்றி உலகக் கிரிக்கெட்டிற்கே அவர்தான் பிதாமகன். இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு அவர் பெயரைச் சொல்லிக்கொண்டு இருக்கலாம். ஆக அன்று தொடங்கி இன்றுவரை ஆஸ்திரேலியா வலுவான அணியாகவே கருதப்படுகிறது. பெரும்பாலான கிரிக்கெட் குழுக்களில் கடைசியில் ஆட வருவோர் பௌலர்களாகவே இருப்பார்கள். எனவே, ஏழ விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்ந்துவிட்டால் அதிகபட்சம் இருபது ரன்களுக்குள் ஆட்டம் முடிந்துவிடும். ஆஸ்திரேலியா மட்டும் இதற்கு விதிவிலக்கு. ஆஸ்திரேலியாவின் தேசிய மிருகமான கங்காருவின் வால் பகுதி பலம் வாய்ந்தது. அதைப் போன்று ஆஸ்திரேலியாவின் கடைசி ஆட்டக்காரர்களும் (பௌலர்களும்) விதிவிலக்காக மிகவும் ஸ்ட்ராங்க் என்பது பல முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. அப்பேர்பட்ட பலமான ஆஸ்திரேலியாவுடன் மோத இந்தியக் குழு ஆஸ்திரேலியாவிற்கு பயணித்தது. கங்காரு நாட்டிற்குப் பயணித்த குழுவில் நமது பங்காருவும் இடம்பெற்றார். அதாங்க ஆஸ்திரேலியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட குழுவில் இடம்பெற்ற நமது தங்கம் சச்சினைத் தாங்க சொல்றேன்.

இன்றைக்கு ஒருநாள் போட்டிகள் என்று பிரமாதப்படுத்தப்படுகிறதே அதன் நதிமூலம் ரிஷிமூலம் ஆராய்ந்தால் அது ஆஸ்திரேலியாவாகத்தான் இருக்கும். ஆம். எழுபதுகளில் ஐந்து நாட்கள் ஆடும் ஆட்டத்திற்குப் பதில் ஒருநாள் ஆட்டம் ஆடலாம் என்று திட்டமிட்டு அதை அறிமுகப் படுத்தியவர் கெர்ரி பேக்கர் என்னும் ஆஸ்திரேலியர்தான். ஒருநாள் போட்டிகள் விறுவிறுப்பாக இருப்பது மட்டுமன்றி, விரைவில் முடிவடைந்தும் விடுவதால் ஆஸ்திரேலியாவில் இதற்கு ஏகப்பட்ட வரவேற்பு, கிரிக்கெட் வீரர்களுக்கும் இந்த ஒருநாள் ஆட்டம் ரொம்பவே பிடித்திருந்தது. ஐந்து நாள் ஆட்டத்தைக் காண வருவோரை விட இதுபோன்ற ஒருநாள் ஆட்டத்திற்கு ரசிகர்கள் மொய்க்கத் துவங்கினர். அதிகமான ஒருநாள் போட்டிகளில் ஆடினால் அதிகப் பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தில் பல முன்னணி வீரர்கள் இவர் ஏற்பாடு செய்த போட்டிகளில் பங்கேற்கத் துவங்கினர்.

### இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன்




ஆஸ்திரேலிய வீரர்கள், பத்திரிகை கள் அனைவரும் சச்சினைப் பாரா ட்டித் தள்ளினர். ஆஸ்திரேலிய முன் னாள் பேட்ஸ்மென் ஓ நீல் இது வயதை மீறிய திறமை, இவனது ஸ்ட்ரோக்கு கள் அனைத்து சர்வதேச ரகத்தில் இருக்கிறது. புதியவன் போன்று தெரி யவே இல்லை என்றார். ஆஸ்திரே லிய கேப்டன் பாரர்டரோ, 19 வயதி லும் இவன் இந்தப் போடு போட்டால் 25 வயதில் என்ன செய்வானோ என் பதை நினைத்தால் உதறலாக இருக் கிறது என்றார். ஆஸ்திரேலிய வானொலி வர்ணனையாளர் டிம் லேன் ஒருபடி மேல் சென்று இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன், இவன் எது வேண் டு மானாலும் செய்வான் என்றார்.

**கே. ரமேஷ்**

(தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 09 இல் கூட்டெண் 06 இன் பலன்கள்



#### தோற்றம்

71

செவ்வாயுடன் சுக்ரன் சேர்ந்த ஆதிக்கப்பலன். உயரமாக சதைப்பிடிப்புடன் இருப்பர். கவர்ச்சியாகப் பெண்மை கலந்த தோற்றத்தில் உள்ளவர். பெரிய நெற்றி, நல்ல நீண்டமைந்த புருவங்கள், அடர்ந்,ந தலைமுடி, வரிசையான, அழகான பற்கள், சிறிய மூக்கு, சதைத்திரட்சியுடன் தாடை உறுதியாக இருக்கும். கம்பீரத் தோற்றம் போர்வீரர் போன்று இருக்கும்.

#### குணம்

மகிழ்ச்சியாக எப்போதும் இருப்பர். உல்லாசமாகக் கேளிக்கையில் பொழுதைப் போக்குவர். பெண்களுடன் ஜோக்கடித்துப் பேசிக் கொண்டிருப்பர். சில்க் சட்டை அல்லது ஜிப்பாவில் செயின், மோதிரம் போன்ற நகையணிந்து நெற்றியில் குங்கும அல்லது சந்தனப் பொட்டுடன் ஜாலியாக சினிமாவிற்குக் கிளம்புகிறவர்போல இருப்பர். வாய் ஏதாவது பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருப்பர். பீடா, பான்கூடப் போட்டுக் கொண்டிருப்பர். இவர்கள் எல்லோரும் சாப்பிட வேண்டும். எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என நினைப்பர். தீவிர உணர்வும் கோபமும்கூட இவர்களிடம் எழும். எப்போதெனில் தம்மை யாராவது கிண்டல் செய்தால், தம் மகிழ்ச்சிக்குத் தடை போட்டால்! இவர்கள் உலக வாழ்வில் சுகமனுபவிப்பதை நியாயமாகக் கருதுவர். டிசைனுள்ள வண்ண ஆடையை விரும்பி அணிவர். விதவிதமாக உடுத்துவர். வகை வகையாக சுவை சுவையாக உண்ணுவர். பாட்டு, ஓவியம், நடனம், நாடகம், காதல் கதை, நல்ல கவிதை, நயமான நகைச்சுவைப் பேச்சு பொழுதுபோக்கான அரட்டை இவர்களுக்கு மிகப் பிடிக்கும். அறிவும் கலை ஞானமும் இருக்கும். இவர்களின் சில எதிர்பார்ப்புகளால் நல்லவராகவும் கெட்டவராகவும் சமயத்திற் கேற்ப இருப்பர். இவருக்கு உயர்வு எண்ணமிருக்கும். ஏனெனில், அழகும் தூய்மையும் கலையும் அறிவும் உள்ளவரானமையால் பிறருக்குப் பணியமாட்டார். ஏவல் கொள்ளவே நினைப்பர். இதனால் வம்பும் இவருக்கு வந்து சேரும். தகுதிக்கு ஏற்காதவர்களுடனும் சமமாகப் பழகுவர். முகத்துதிக்கு மயங்கிச் செலவழிப்பர். தீவிர காதல், பொறாமைகூட எழும். அடிதடியிலும் இறங்குவர். நல்லவர் எனும் பெயர் பெற பிறருக்கு குழைத்து ஒழுக்கத்தையும் இங்கிதத்துடன் அனுசரிப்பர். பிறர் அறியாதவாறு சில கெட்ட பழக்கங்களைக் கொண்டிருப்பர். இதனால் பிறருக்கு எந்த துன்பமும் [illegible] இவர்களின் கேள்வியாக இருக்கும். தெய்வ நம்பிக்கை உண்டு. காரியம் நிறைவேறவே இந்த நம்பிக்கையில் வழிபாடு செய்வர். நியாயத்தை எல்லோரும் மதிக்க வேண்டும் என்பர். எல்லோரும் வாழ்வில் மேம்பாடடைய எண்ணுவர். ஆலோசித்தே எதையும் செய்வர். மிகவும் நல்லவர். பெரிய மகானைப் போல யோகம், தவம், தியானம் செய்து தத்துவப்படி வாழ்கிறவராவார். இடைவிடாமல் முயன்று எதையும் அடைய நினைப்பர். ஆத்திரம், பழிவாங்க எண்ணுதல் பிறரை ஒழிக்க நினைத்தல் முரட்டுத்தனத்தைத் தூண்டும். செல்வம் செல்வாக்கு கையாள் அனைத்து வசதிகளையும் அதற்காகப் பயன்படுத்துவார். புத்தியும் அழகும் பல உதவியாளரைக் கவர்ந்திழுக்கும். உயர்ச்சிவசப்படும் கவிஞர். காதலுக்காக எதையும் தியாகம் செய்யக் கூடியவர். காற்றும் இயற்கையழகும் இவருக்குக் கட்டாயம் தேவை. ஆளை நன்கு எடை போடுவர். அயராமல் உழைப்பர். செயற்படத் தாமதம் செய்ய மாட்டார். சூடதிகம் கொண்டவர். நடுநிலை தவறாமல் நியாயம் பேசுவர். எளிதாக எதையும் எப்படியும் போகட்டும் என விடமாட்டார்.

#### குடும்பம்

கண்டதும் காதல் கொள்ளும் போக்கும், யாரையும் எதையும் லட்சியம் செய்யாமல் மணம் முடிக்கும் துணிவும் உள்ளவர். அழகிய மனைவி வருவாள். பெண்களால் அதிர்ஷ்டம் இவருக்கு உண்டு. பெண்களால் பிர[illegible] உண்டு. ஆனாலும் இவர்கள் குடும்ப மகிழ்வும் அமைதியும் கொண்டிலடங்கும். ஒன்றுக்கு மேல் மனைவியை வைத்துக்கொள்ளுவர். பெண் வாரிசு தாராளமாகப் பிறக்கும். மக்களதிகம் பெறுவர். பணம் காசு தாராளமாகச் சம்பாதிப்பர். சொத்துப்பத்தும் அமையும்.

#### தொழில்

இவர்களுக்குக் கலையும் கலை சார்ந்த தொழிலும்தான் ஏற்றவை. சினிமாவில் கதை வசனம் பாடல் எழுதலாம். சொந்தமாகப் படம் எடுக்கலாம். நடிக்கலாம். பாடலாம். டப்பிங் பேசலாம். பிரமிக்கவைக்கும் பேச்சாற்றல் இருக்கும்; வக்கீலாகலாம். அரசியலில் சேர்ந்து பெரிய பதவியை அடையலாம். பெரும் சொத்தும் சேரும். ராஜதந்திரியாகலாம். நர்சுகளாக அறுவை மருத்துவர்களாக இன்ஜினியர்களாக ஜவுளி, பட்டு, வைரம், நகைக்கடை முதலாளிகளாக ஆகலாம். இசையமைப்பாளராகலாம். ரியல் எஸ்டேட், பெண்கள் உபயோகிக்கும் அழகு, வாசனைப் பொருள் தயாரிப்பும் விற்பனையும் நடத்தலாம். கட்டடம் கட்டி வாடகைக்கு விடலாம். நடன நிகழ்ச்சி நடத்தலாம். நடனமிடலாம். இசைக்கருவிகளை இயக்கலாம். பொலிஸ், இராணுவம்கூட பணி செய்ய அமையலாம். யோகம், தவம், தியானம் செய்து அதீத மன உடல் ஆற்றலைப் பெறலாம்.

#### நோய்


நீரிழிவு, வெப்பப் பாதிப்பால் வரும் நோய்கள், தொண்டை, கண்கோளாறு, பி.பி. சிறுநீரகக் கேடு, வாத பாதிப்பு, வலிகள், இதயக் கோளாறு உண்டாக வாய்ப்புண்டு. வயிற்று வலி முக்கியமானது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

# 17.08.2014-16.09.2014



## மேடம்

**அச்சுவினி, பரணி,
கார்த்திகை 1 ஆம் பாதம்**

**வரலாற்றில் இடம்பெறும் விதத்தில் வாழ்க்கையை அமைக்க விரும்பும் மேட இராசி அன்பர்களே!
மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறும் நேரம்!**

## மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறும் நேரம்!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலிருந்து ஆகஸ்டு 31 ஆம் திகதி வரை சப்தம ஸ்தானத்தில், சனியுடன் உங்கள் ராசிநாதன் செவ்வாய் சேர்க்கை பெற்றிருக்கிறார். தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனியோடு ராசிநாதன் இணையும் பொழுது, துன்பங்கள் தூளாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். இன்பங்கள் இல்லம் தேடி வரும்.

லாபத்தைக் கருத்தில் கொண்டு ஏற்பாடு செய்த தொழில் எதிர்பார்த்தபடியே சிறப்பாக நடைபெறும். நகை வாங்குவது முதல் நல்ல இடம், வீடு வாங்குவதுவரை நீங்கள் தீட்டிய திட்டங்கள் நிகழ்காலத்தில் வெற்றி பெறும் விதத்தில் இருக்கிறது. என்ன இருந்தாலும் சனி, செவ்வாய் இரண்டும் முரண்பாடான கிரகங்கள் என்பதால் அவை இணையும் இடத்திற்கு உரிய ஆதிபத்தியத்தில் ஏதேனும் தொல்லைகளைக கொடுக்கலாம். எனவே கூடப்பிறந்தவர்கள் கொஞ்சம் குணம் மாறலாம். தேடிச் சென்ற வரன்கள் முடிவிற்கு வராமல் தாமதம் ஏற்படலாம்.

குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்திற்காக கூடுதல் செலவிடும் சூழ்நிலையை இந்தச் செவ்வாய், சனியின் ஆதிக்கம் ஏற்படுத்திக் கொடுக்கும். விரயங்கள் ஏற்படாமல் இருக்க விழிப்புணர்ச்சி தேவைதான் என்றாலும், உரிய விதத்தில் வழிபாடுகளை மேற்கொண்டால் உள்ளத்தில் மகிழ்ச்சி எப்பொழுதும் குடிகொள்ளும்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது

ஆவணி என்றதும் நம் நினைவிற்கு வருவது சதுர்த்தி ஒன்றுதான். உங்கள் ராசியின் அடிப்படையில் விரய ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கிறார். எனவே ஆனைமுகப் பெருமானை விரதமிருந்து சதுர்த்தி நாளில் வழிபட்டால் வாழ்வில் வளம் கிடைக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வாரிசுகள் இல்லாதவர்களுக்கு வாரிசுகள் உருவாகும். என்னாளும் இனிமையை வரவழைத்துக் கொள்ள ஆனைமுகன் சன்னிதிக்கு அடியெடுத்து வையுங்கள்.

**கன்னி ராசியில் புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்டு 26 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 3, 6 இற்கு அதிபதி 6 இல் சஞ்சரிப்பது யோகம்தான். முன்னேற்றப் பாதைக்கு வித்திடும் விதத்தில் சில காரியங்கள் நடைபெறும். உத்தி யோகத்தில் உள்ள இடையூறுகள் அகலும். மாமன், மைத்துனர் வழியில் உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். சேமிப்பு உயர்ந்து செயற்பாடுகளில் வெற்றி காண்பீர்கள்.

**அஷ்டமத்து செவ்வாய்
அடியெடுத்து வைக்கும் நேரம்!**

செப்டம்பர் 1 ஆம் திகதி விருச்சிக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் செவ்வாயால் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம். குருவின் பரிபூரண பார்வை செவ்வாயின் மீது பதிகிறது. எனவே, குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். கட்டடம் கட்டும் முயற்சிகளிலிருந்த தடை அகலும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

மாதத் தொடக்கத்தில் விரயாதிபதி வியாழனும், தனாதிபதி சுக்ரனும் இணைந்து சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்கள். எனவே, விரயத்திற்கேற்ற தனவரவு வந்துகொண்டேயிருக்கும். இருப்பினும் முரண்பட்ட கிரகங்களின் சேர்க்கை என்பதால், செப்டம்பர் முதல்நாள் சுக்ர பெயர்ச்சிக்குப் பிறகு மிகுந்த நற்பலன்களைக் காணப் போகிறீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. சிம்ம சுக்ரன் உங்களுக்கு நன்மைகளையே வழங்கும். இம்மாதம் கணபதி வழிபாடு உங்கள் காரிய வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வளர்ச்சி கூடும் மாதமாகக் கருதலாம். வருமானம் போதுமானதாக அமையும். செவ்வாய் பெயர்ச்சி வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடன்பிறப்புகளின் வழியே ஒத்துழைப்புகள் கிடைத்து, ஒரு நல்ல காரியம் நடைபெறும். கேது பலத்தால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கணவன்- மனைவிக்குள் அன்பும், பாசமும் கூடும். செப்டம்பர் முதல் திகதியில் நிகழும் சுக்ரப் பெயர்ச்சியால் பெண் குழந்தைகளின் வழியிலிருந்த பிரச்சினைகள் அகலும்.

## சிவல்புரி சிங்காரம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள்,
ரோகிணி, மிருகசீரிடம்
1,2 ஆம் பாதங்கள்!**

**வளைந்து கொடுத்துச் செல்வதன் மூலம் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ளும் இடப இராசி அன்பர்களே!
வியாபார விரோதங்கள் விலகும்!**

## வியாபார விரோதங்கள் விலகும்!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்ரன், பகை கிரகமான வியாழனுடனிருந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே பல நல்ல வாய்ப்புகள் உங்களுக்கு வருவதற்கான அறிகுறிகள் தென்படுமே தவிர, வருவதில் சற்று தாமதம் ஏற்படலாம்.

அதே நேரத்தில் 6 இற்கு அதிபதி சுக்ரனும், அஷ்டமாதிபதி குருவும் இணையும் பொழுது, விபரீத ராஜயோக அடிப்படையில் சில எதிர்பாராத திருப்பங்களும் நடைபெறும். நினைத்துப் பார்க்காத சில நிகழ்வுகள் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். உத்தியோகம் தொழில் சம்பந்தமாக நீங்கள் எடுத்த முடிவில் மாற்றங்களும், ஏற்றங்களும் உருவாகலாம். மந்தன் எனப்படும் சனி மங்களகாரகன் எனப்படும் செவ்வாயுடன் இணைந்திருக்கும் வரை அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமாகும்.

அந்த கிரக சேர்க்கை ஆகஸ்டு 30 ஆம் திகதி வரை உள்ளது. அதன் பின்னர் செவ்வாய்ப்பெயர்ச்சியாகி உங்கள் செயற்பாடுகளில் வெற்றி வாகைசூட வைக்கப் போகிறது. பொதுவாகவே உங்கள் ராசிக்கு, சனி யோகம் செய்யும் கிரகமாகும். அது உச்சம் பெற்றிருக்கும் பொழுது, எதைத் தொட்டாலும் வெற்றி கிடைக்கும். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். அதே நேரத்தில் அந்த யோககாரகனோடு பகை கிரகம் இணையும் பொழுது கொஞ்சம் யோசித்துத் தான் செயற்பட வேண்டும்.

உங்கள் யோசனைகளைக் காட்டிலும் மற்றவர்கள் கூறும் யோசனையே வெற்றி பெறும். குறிப்பாக சனியின் ஆதிக்கம் வலுவாக இருக்கும் நேரத்தில் விநாயகப் பெருமானையும், சனி பகவானையும், அனுமனையும் வழிபடுவது நல்லது. விநாயகர் சதுர்த்தி இடம்பெறும் மாதமான இந்த ஆவணி மாதத்தில் விரதமிருந்து விநாயகரை வழிபட்டு வருவது நல்லது.

ஆனைமுகனுக்கு அருகம்புல் மாலை சூட்டினால் தனலாபம் பெருகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மேலும் இடப ராசியாக உங்கள் ராசி அமைவதால் நந்தி வழிபாட்டையும் நீங்கள் மேற்கொள்வது நல்லது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**


ஆகஸ்டு 26 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். தன பஞ்சமாதிபதியான புதன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பூர்வ புண்ணியத்து பலன்கள் அனைத்தும் வந்து சேரும். பிள்ளைகள் வழியில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். உதிரி வருமானங்கள் பெருகும். உதவிக் கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை உயரும். குடும்பத்தில் தாமதப்பட்ட சுபகாரிய நிகழ்வுகள் தடையின்றி நடைபெறும்.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 1 ஆம் திகதி விருச்சிக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். சப்தமாதிபதி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பயணங்களால் பலன் கிடைக்கும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பூமி யோகம் உண்டு. புதியவர்களைக் கூட்டாளிகளாக இணைத்துக் கொண்டு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

அதே செப்டம்பர் முதல் நாளில் சிம்ம ராசியில் சுக்ரனும் சஞ்சரிக்கப்போகிறார். ராசிநாதன் சுகஸ்தானத்தில் சஞ்சரித்து தொழில் ஸ்தானத்தைப் பார்க்கும் பொழுது தொழில் வளம் மேலோங்கும். தொகை வரவு திருப்தி தரும். விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தங்கம், வெள்ளி வாங்குவதில் தானாகவே நாட்டம் செல்லும். செங்கரும்பாக பேசும் உறவினர்கள் உங்கள் செயற்பாடுகளுக்கு உறுதுணை புரிவர். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபட்டு ஆனந்தத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள்.



## இடபம்

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

இம்மாதம் சுப விரயங்கள் அதிகரிக்கும் மாதமாகக் கருதலாம். பஞ்சம ராகுவால் பாகப்பிரிவினைகளில் தாமதம் ஏற்படலாம். என்ன இருந்தாலும் எதிரிகளின் ஸ்தானத்தில் செவ்வாயும், சனியும் சேர்க்கை பெற்றிருப்பதால் மறைமுகப் பகை இருக்கத்தான் செய்யும். கணவன்- மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலம் அமைதி கிடைக்கும். வீடு மாற்றம், இட மாற்றங்கள் விரும்பியது போலவே நடைபெறும். தெய்வ வழிபாடுகளில் கவனம் செலுத்தினால் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கை அமையும். சதுர்த்தியன்று விநாயகப் பெருமானையும், சஷ்டியன்று சண்முகநாதனையும் வழிபட்டுவர சந்தோஷங்கள் உருவாகும்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப்பகிர்வு நாடுபூராகவும் அமுல்படுத்தப்படுதல் அவசியம்

## பேராசிரியர் குணரட்ன வலியுறுத்தல்

பொருத்தமற்ற 1987 ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தம் மற்றும் காலம் கடந்து விட்ட 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஆகியவற்றை நடைமுறைப் படுத்துவதிலும் பார்க்க அதிகாரத்தை இலங்கை முழுவதிலும் பகிர வேண்டும் என தெற்காசிய நாடுகளில் பயங்கரவாத நடவடிக்கை குறித்து ஆராய்ச்சிகளை மேற் கொண்டுவரும் பேராசியர் ரொஹான் குணரட்ன தெரிவித் துள்ளார்.



இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு சிறந்த நண்பனாகவோ அல்லது கூடாத எதிரியாகவோ இருக்கக்கூடும். ஒரு குறிக் கோளுடைய மனிதர் என்ற வகை யில் மோடி ஒரு முட்டாள்தனமான தலைவரல்ல. முட்டாள்களையோ அல்லது எதிரிகளையோ மோடி ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டார்.

புதுடில்லியின் கடந்த கால சம் பிரதாயங்களை தகர்த்து இந்தியாவை புதியதும் தந்திரோபாய மிக்கதுமான பாதையில் மோடி திறமை வாய்ந்த தலைவர்களின் பரிண மிப்புடன் வழிநடத்தி செல்கிறார்.

"காங்கிரஸைப் போன்று மேற் குலக சார்பு போக்கில் இழுபட்டு செல்லாமல், இந்தியாவே சிறந்ததாக உருவாக வேண்டும் என்பதே மோடியின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இன்னுமொரு பனிப் போருக்கு பங்களிப்பு செய்வதிலும் பார்க்க மோடி மேற்குலக மற்றும் கீழைத்தேய நாடுகளுடன் தொடர் புகளை கொண்டிருப்பார். இருந்த போதிலும், புதுடில்லி தொடர்ந்தும் சீனா தொடர்பில் எச்சரிக்கையாக இருக்கும் அதேநேரம், இந்தியா பல்முனை உலகமொன்றுக்கு பங் களிப்புச் செய்யும் மூன்றாவது சக்தியாக இருக்கும்" என்று பேரா சிரியர் குணரட்ன தெரிவித்துள் ளார்.

இந்திய காங்கிரஸ் கட்சி தோற் கடிக்கப்பட்டு பாரதீய ஜனதா கட்சி எழுச்சி பெற்றமையானது இந்திய-இலங்கை உறவுகளை பலப்ப டுத்துவதற்கு சிறந்த வாய்ப்பொன்றை உருவாக்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருத்தமற்ற 1987 ஆம் ஆண் டின் இந்திய-இலங்கை ஒப்பந்தம் மற்றும் காலம் கடந்துவிட்ட 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஆகியவற்றை நடைமுறைப்படுத் துவதிலும் பார்க்க, அதிகாரத்தை இலங்கைமுழுவதிலும்பகிரவேண்டும்.


பயங்கரவாதத்துக்கு ஆதரவளி த்த மற்றும் விடுதலைப் புலிகளுக்கு புத்துயிரளிக்கும் முயற்சிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்துவரும் தமிழ்நாட்டின் சில அரசியல்வாதி கள் பகைமை உணர்வை கொண் டிருக்கின்ற போதிலும், இந்தியா வின் தென் பகுதியிலுள்ள பாரதீய ஜனதா கட்சி மற்றும் பாரதீய ஜனதாக கட்சி அல்லாத பங்குதாரர்களுக்கு அழைப்பு விடுப்பதற்கு இலங்கை புதுடில லியுடனான நல்லுறவை பயன்படுத்த வேண்டியது மிக முக்கியமாகும்.

"மோடியின் எழுச்சியானது இந் தியாவோ அல்லது இலங்கையோ புறக்கணிப்பு, அலட்சியம் அல்லது இழப்பு போன்ற எதற்கும் வாய் ப்பளிப்பதற்கான தருணமல்ல. இந்திய-இலங்கை உறவுகளில் புதிய யுகமொன்றுக்கு கட்டியம் கூறுவதற்கு இந்த வாய்ப்பை இல ங்கையும் இலங்கையர்களும் புத்திசாதுர்யமாகவும் எச்சரிக்கை யாகவும் பயன்படுத்தி கொள்ள வேண்டும்" என்றும் பேராசிரியர் குணரட்ன மேலும் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. மோடி தலைமையிலான இந்தியா: இந் திய-இலங்கை உறவுகளில் ஒரு திருப்புமுனை" எனும் தலைப்பில், பேராசிரியர் ரொஹான் குணரட்ன, இலங்கை நாடாளுமன்றில் விசேட விரிவுரையொன்றை நடத்தவுள்ளார்.

இலங்கை நாடாளுமன்ற ஊடக வியலாளர் சங்கம், அரசாங்க தகவல் திணைக்களத்துடன் இணை ந்து இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த விரிவுரை இன்று புதன் கிழமை, முற்பகல் 10:30 மணி யிலிருந்து 11:30 மணி வரை நாடாளுமன்ற கட்டடத்தொகுதியின் குழு அறை 2இல் இடம்பெறவுள் ளது என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## முடக்கொற்றான்/ முடக்கறுத்தான்

Botanical Name-Cardiosperum haileacabum
Family- Sapinduceae
Engl-Ballon vine
Sinh-Penale Wel

இது ஒரு பருவ ஏறுகொடி, மஞ்சரியிலுள்ள அடிமலர்கள் பற்று கம்பியாக மாறிப்படருவதற்கு உதவுகின்றது. தண்டு மற்றும் கிளைகளில் மென் வரிகள் காணப்படுகின்றன. இலை கூட்டிலை முட்டைவடிவின. சிற்றிலை கூட்டிலையின் மடல் பின்வுற்றலை. மலர்கள் சிறியவை. குடைபோன்று குவிந்த மஞ்சரி களாக உள்ளன. வெள்ளை நிறம், கனி பேரி வடிவினது. அழுங்கியது; தூவிகளுடன் மூன்றாக அமைந் தது. பலூன் போன்று வீங்கியது. எனவே ஆங்கிலத்தில் Ballon Vine எனப்படுகிறது. கறுப்பு நிறத் திலான விதைகளை உடையவை. யாழ்.மாவட்டத்தில் பொதுவாக வேலிகளில், புதர்களில் படர்ந்து வளரும் ஓர் களைச் செடியாகும். விதை கள் மூலம் இனவிருத்திசெய்யலாம்.

**மருந்துச் சத்துக்கள்**

100 கிராம் இலையில் உள்ள சத்துக்கள்

புரதம் 4.7 கிராம்
கொழுப்பு 0.6 கிராம்
மாச்சத்து 9.1 கிராம்
கனிமங்கள் 2.3%

**மருத்துவப் பயன்கள்**

இதன் முழுக்கொடியையும் நன்றாகக் கழுவி இரசம் வைப்பதற்குரிய சரக்குகளுடன் சேர்த்து புளி நீங்கலாக இரசம் வைத்து காலையில் குடித்துவர வாதநோய்களில் ஏற்படும் வலி தணியும்.

அரிசி, உளுத்தம்மாவை அரைப்பதுடன் இதன் இலைகளையும் சேர்த் தரைத்து தோசை சுட்டு உண்ண லாம். அல்லது ஏனைய கீரைகளு டன் சேர்த்து சமைத்து உண்ண லாம். அல்லது இவ் இலைகளை எடுத்து சட்டியிலிட்டு தண்ணீரி லிட்டு சுண்டக்காய்ச்சி வேளைக்கு 30 மில்லி வீதம் தினம் 2 வேளை 3 நாட்கள் அருந்திவர நரம்பு சம் பந்தமான பிடிப்புமூலம் இருமல் தீரும், குடல் சுத்தியாகும்.

இதன் இலைகளை ஆமணக்கு எண்ணெய்யில் வதக்கி கீழ்வாதம், வீக்கம் முதலியவற்றுக்கு வைத்து கட்டலாம்.

இக்கொடியில் சாற்றை கை, கால் விறைப்பிற்கு பூசலாம்

இலைகளை எண்ணெயிலிட்டு காய்ச்சி வலிகளுக்குப்பூசலாம். இதன் தண்டுக் குடிநீர் காய்ச்சலை நீக்கும் தன்மையுடையது.

குறிப்பு: எமது பிரதேசத்தில் சிலர் முடக்கொற்றானுக்கு பதில் வேறு ஓர் கொடியை பயன்படுத்துகின்றார்கள்.

**அது முடக்கொற்றான் அல்ல, அதன் விபரம்**

தமிழ்ப்பெயர்–எருமைக்கொத்தான்
Botanical Name-Cassythafiliformis
Family-Cassy thaceae
Engl- Love -vine

இது ஓர் ஒட்டுண்ணித் தாவரமாகும். (Parasite) இத்தாவரத்தின் குடிநீரால் தோல்வியாதிகள் தீரும். குடற்பூச்சிகள் அழியும். சிறுநீரை பெருக்கும் தன்மையும் உண்டு. தென்னிந்திய மக்கள் மோர், தயிர் போன்றவற்றில் இக்கொடியை ஊற விட்டு வடித்து அருந்துகின்றனர்.

இதன் சாற்றை நல்லெண்ணெய் யுடன் சேர்த்து காய்ச்சி தலைக்கு வைக்க மயிர்க்கால்கள் பலப்படும்.

**முடக்கொற்றான் துவையல்**

**தேவையான பொருட்கள்**

முடக்கொற்றான் இலை 3 கைப் பிடி, காய்ந்த மிளகாய் 6, உழுந்து 25 கிராம், வெந்தயம் 10 கிராம், புளி எலுமிச்சை அளவு, பசுநெய் 10 கிராம், தேங்காய் துருவல் கால்மூடி, உப்பு தேவையான அளவு, விளக் கெண்ணெய் 2 கரண்டி

**செய்முறை**

வாணலியில் விளக்கெண்ணெய் விட்டு மிளகாய், உழுந்து, வெந்தயம் இவற்றை வறுக்க வேண்டும். தேங் காயை வதக்கவும். முடக்கொற்றான் இலையை அலசி அரிந்து இதை யும் வதக்கி எல்லாவற்றையும் நன் றாக மசிய அரைத்து புளியை சூடான வாணலியில் புரட்டி எடுத்து அரைக் கும் பொருளுடன் உப்பும் சேர்த்து அரைத்து சாப்பாட்டிற்கு தொட்டுக் கொள்ளவும்.

**இதன் பயன்**

வயிறு தூய்மையாகும், பசி எடுக்கும், பித்தம் அகலும், ஜீரண சக்தியுண்டாகும்.



**முடக்கொற்றான் இலை சூப்**

**தேவையான பொருட்கள்**

முடக்கொற்றான்இலை2பிடி, நெய், சீரகம், இஞ்சி, மிளகு, பூண்டு, கசகசா 3கரண்டி, சீரகம்1/2கரண்டி, இஞ்சி ஒரு நடுத்தரத் துண்டு, தேங்காய் துருவல் அரைகால் மூடி, சோம்பு 1/2 கரண்டி, உப்பு தேவையான அளவு, சின்ன வெங்காயம் பொடியாக அரிந் தது ஒரு கைப்பிடி, மல்லித் தூள் 2 கரண்டி, பசுநெய் 4 அல்லது 5 கரண்டி

**செய்முறை**

அரிசி களைந்த நீரில் வெங்காயம் பாதி, சோம்பு, தேங்காய்துருவல், கசகசா இவற்றை அரைத்து ஊற்றவேண் டும், உப்பைப் போடவும், மல்லித் தூள் போடவும். முடக்கொற்றானை பொடியாக அரிந்து போட்டு வேக விடவும். வாணலியில் நெய்விட்டு பட்டை, சோம்புத்தூள் செய்து போட்டு சிவந்ததும் இஞ்சியை தோல் சீவி, பூண்டை தோலுரித்து கரகரப்பாக அரைத்து வாணலியில் போட்டு வதக்க வேண்டும். பிறகு சூப்பில் தாளி த்து சாப்பாட்டில் போட்டு சாப்பிடலாம்.

**இதன்பயன்**

வயிறு தூய்மையாகி, ஜீரண மண்டலம் வலிமை பெறும்.

**முடக்கொற்றான் காம்பு இரசம்**

**தேவையான பொருட்கள்**

எலுமிச்சைப்பழம் 1, தக்காளி 3, சீரகம் 2 கரண்டி, மிளகு 1/2 கரண்டி, பூண்டுபெல், உப்புதேவையானஅளவு, முடக்கொற்றான் காம்பு பொடியாக ஒரு விரல் நீளமாக அரிந்து 5 கைப் பிடி 4 டம்ளர் தண்ணீர், பசுநெய் 1 கரண்டி

**செய்முறை**

முடக்கொற்றான் (காம்பு) தண் ணீரில் வேகவிடவும். நன்கு வெந்த தும் வாணலியில் நெய்விட்டு (ஒரு கரண்டி) சீரகம் ஒரு கரண்டி போட வும். சீரகம் வெடித்ததும் வெந்த முடக்கொற்றான் காம்பு இரசத்தை ஊற்றவேண்டும். தக்காளியை கரை த்து அதோடு எலுமிச்சைச்சாறு பிழி ந்து ஊற்றி உப்பைப் போடவும். சீரகம், மிளகு, பூண்டு இவற்றை உடைத்து போட்டு கறிவேப்பிலை உருவிப் போட்டு மல்லித்தழை நசுக்கி போட்டு இரசம் ஒரு கொதி வந்ததும் இறக்கி வைக்கவும் இவ்வாறு இரவில் இர சம் செய்து வைக்கவும். மறுநாள் அதிகாலை வெறும் வயிற்றில் ஒரு டம்ளர் இறுத்துக் குடிக்கவும். ஒரு டம்ளர் அல்லது 2 டம்ளர் குடிக்க வும். இவ்வாறு 3 வாரம் குடிக்க வும். இவ்வாறு குடித்தால் வயிற்றுப் போக்கு போகும்.

**இதன் பயன்**

பேதி மருந்து சாப்பிட்டு வயிற் றுப் போக்கு போவதால் பித்த வாயு வெளியேறும். பித்தவாயுவால் உண் டாகும் கை, கால், இடுப்பு வலி குண மாகும். மயக்கம் இருக்காது, பித்த மயக்கம் இருக்காது, உடம்பு கல கலப்பாகும், வயதானவர்களுக்கு மாதம் ஒருமுறை இவ்வாறு இரசம் வைத்து கொடுக்கலாம்.

**முடக்கொற்றான் இலை தோசை**

**தேவையான பொருட்கள்**

1/2 பிடி அரிசி, முடக்கொற்றான் இலை உருவியது 2 கப், தேவை யான அளவு உப்பு

**செய்முறை**

முதல் நாள் மதியம் அரிசி யைக் களைந்து ஊறவைக்கவும். 2 மணி நேரம் ஊறியதும் இலையை நீரில் அலசிக் கொள்ளவும். கிரைண்டரில் முதலில் இலைகள் அனைத்தையும் போட்டு ஒரு கைப்பிடி அரிசியும் போட்டு இலேசாக தண்ணீர் தெளி த்து ஓடவிடவும்.

இவை மாவு போல் வரும்வரை இலையை துடுப்பின் பகுதியிலிரு ந்து எடுத்து போடவும். இவ்வாறு நன்கு நுரைக்கும் வரை மசித்த தும் மீதி அரிசியையும் போடவும். தோசை மாவு பதத்தில் அரைத்து கல்லைக்கழுவி ஊற்றி உப்பு போட்டு ஆப்பமாவு பதமாகக் கரைத்து மறுநாள் அதிகாலை 5 1/2, 6 மணிக்குள் தோசையாக ஊற்றி சாப்பிட வேண்டும். இவ்வாறு 3 அல்லது 5 நாட்கள் சாப்பிட பித்தம் முற்றிலும் குணமாகும். இதே மாவை உடன் மாவாக தோசை ஊற்றி அதி காலை யில் சாப்பிட பித்தம் குண மாவ தோடு பசி நன்கு ஏற்படும். ஒருதரம் வயிற்றுப் போக்கு போகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன் M.D (Siddha) India
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலும் பாப்பரசரின் வருகையும்

இரண்டுநாள் பயணமாக அடுத்த ஜனவரி 13 ஆம் திகதி பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் தென்படத் தொடங்கியுள்ளன.

திடீர் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு ஒன்றை விடுவிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் ஆயத்தமாகி வருவதாகசெய்திகள்வெளியாகியிருக்கின்றன.

இவ்வருடத் தொடக்கத்திலிருந்தே, முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடும் என்ற ஊகங்கள் பரவலாக அடிபடத் தொடங்கியிருந்தன. ஆனால், அரசாங்கமோ அதனை அடியோடு நிராகரித்து வந்தது.

2016 நவம்பர் வரை ஜனாதிபதித் தேர்தலோ, 2015 ஏப்ரல் வரை நாடாளுமன்றத் தேர்தலோ நடத்தப்படாது என்று அடித்துக் கூறியது அரசாங்கம். ஜனாதிபதியும் நாடாளுமன்றமும் முழுப் பதவிக்காலத்தையும் நிறைவு செய்த பின்னர்தான் அடுத்த தேர்தல் என்ற இறுமாப்பிலிருந்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் அண்மைக்காலங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் ஊடக ஆசிரியர்களுடனான சந்திப்பு ஒன்றில் இது பற்றிக் கேட்டபோது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தால் எந்தத் தேர்தலையும் நடத்த தயாராக இருப்பதாக கூறியிருந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச.

அதையடுத்து அந்தச் சவாலை ஏற்றுக் கொள்வதாகவும் தேர்தலை எதிர்கொள்ளத் தயார் என்றும் நாடாளுமன்றத்தில் வைத்து அறிவித்திருந்தார் ரணில் விக்கிரமசிங்க. அவர் அதனை அறிவித்து சில மாதங்களாகி விட்டன.

கடைசியாக மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் வரையில் அரசாங்கம் அடுத்த நாடாளுமன்ற ஜனாதிபதித் தேர்தல்கள் குறித்து அவ்வளவாக அக்கறைப்பட்டிருக்கவில்லை.

ஆனால், தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல்களின் பின்னர், முன்கூட்டியே தேர்தலை நடத்துவது குறித்தும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீட்டிக்கும் திட்டம் குறித்தும் செய்திகள் வெளியாவது அதிகரித்துள்ளது.

அரசாங்கத் தரப்பிலிருந்து தேர்தல்கள் குறித்து வெளியாகும் தகவல்கள் வெறுமனே எதிர்க்கட்சிகளைக் குழப்பும் நோக்குடையதாக மட்டும் கருதிவிடக் கூடியவையல்ல. அரசாங்கத் தரப்பிலுள்ள குழப்பங்களையும் அது பிரதிபலிக்கிறது.

தென், மேல் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியின் வாக்கு வங்கியில் ஏற்பட்ட சரிவைத் தொடர்ந்து முன்கூட்டியே தேர்தல்களை நடத்தி ஆட்சியை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஆர்வம் அரசதரப்பிடம் உருவாகியுள்ளது. குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான முயற்சிகள் இப்போது தீவிரமடைந்துள்ளது.

முன் கூட்டியே தேர்தலை நடத்துவதால் அதிகபட்சம் ஒரு ஆண்டு பதவிக்காலத்தையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இழக்க நேரிடும். அதற்கடுத்து வரும் ஆறு ஆண்டுகள் பதவியில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இந்த ஒரு வருடப் பதவிக் காலத்தை தியாகம் செய்யவும் தயாராகிவிட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச. ஆனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே எதிர்கொள்வதில் அவர் சில சட்டச் சிக்கல்களையும் நடைமுறைச் சிக்கல்களையும் தாண்டியாக வேண்டியுள்ளது.

வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதியுடன் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்று நான்கு ஆண்டுகள் நிறைவடைகின்றன. ஜனாதிபதி ஒருவர் பதவியேற்று நான்கு ஆண்டுகள் நிறைவடைந்த பின்னர், மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசியலமைப்பு அனுமதிக்கிறது.

இது 18 ஆவது திருத்தசட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே, நடைமுறையில் இருந்தது. இதன்படிதான், முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் தமது முதலாவது பதவிக்காலம் முடிய முன்னரே, ஜனாதிபதித் தேர்தலை அறிவித்து தமது இரண்டாவது பதவிக்காலத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர். ஆனால், இப்போதுள்ள சிக்கல் இவற்றுக்கு அப்பாற்பட்டது.

அதாவது இரண்டாவது பதவிக்காலத்தில் இருக்கும் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ச மூன்றாவது பதவிக்காலத்துக்குப் போட்டியிடுவதற்கு வழிசெய்யும் 18 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ள நிலையில் அவ்வாறு தனது ஆறாண்டுப் பதவிக்காலம் முடியும் முன்னரே தேர்தலுக்கு அழைப்பு விடுக்க முடியுமா என்பது சர்ச்சைக்குரிய விடயமாகும்.

அதாவது 18 ஆவது திருத்தச்சட்டம் இரண்டாவது தடவை ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் ஒருவர் அதற்கு மேலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான சட்டக்கட்டுப்பாடுகளை மட்டும்தான் நீக்கியிருக்கிறது.

இரண்டாவது பதவிக்காலத்தில் இருக்கும் ஒருவர் அதற்குப் பின்னர் முன்கூட்டியே தேர்தலுக்கு அழைப்பு விடுப்பதற்கு வழியுள்ளதா என்று எதையும் கூறவில்லை. எனவே, இந்த விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் கருத்தை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். இதுபோன்ற விடயங்களில் அரசியலமைப்பு ரீதியான மயக்கங்கள், சந்தேகங்கள் ஏற்படும்போது அதனைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு உயர்நீதிமன்றத்துக்கே உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் எப்போது முடிகிறது என்ற சர்ச்சை ஒன்று உருவானபோது அதனைத் தீர்க்கும் ஆலோசனையை உயர்நீதிமன்றமே முன்வைத்தது. அது அவருக்குப் பாதகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

அதுபோலத்தான், இரண்டாவது முறை பதவியேற்று நான்கு ஆண்டுகள் நிறைவடையும் நாளான நவம்பர் 19 ஆம் திகதிக்குப் பின்னர், முன்கூட்டியே தேர்தலை நடத்த முடியுமா, இல்லையா என்று தீர்மானிக்க வேண்டியது உயர்நீதிமன்றமேயாகும்.

அதேவேளை இப்போதைய நிலையில் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு அதுவும் நவம்பர் 19 ஆம் திகதிக்கு முன்னரே அதற்குரிய அழைப்பை விடுப்பதற்கு அதிகாரமுள்ளதா என்று உயர்நீதிமன்றத்தின் கருத்தை அறிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. ஏனென்றால், நாட்டின் அரசியல் சூழல் மற்றும் ஜோதிடர்களின் கணிப்பு ஆகியவற்றைக் கொண்டு ஜனாதிபதித் தேர்தல் பின்தள்ளப்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை என்று தெரிகிறது.

அடுத்த ஆண்டு ஜனவரி 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கையில் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதுவும்கூட அரசாங்கத்துக்கு சிக்கலாக மாறியிருக்கிறது.

பாப்பரசரை இலங்கைக்கு வரவழைக்க அரசாங்கம்பெரும்முயற்சிகளைமேற்கொண்டு இப்போதுதான் இது கைகூடியுள்ளது. 1995 ஜனவரி மாதம் பாப்பரசர் இரண்டாவது ஜோன் போல் இலங்கைக்கு வந்திருந்தார். அதற்குப் பின்னர் பாப்பரசர் ஒருவர் இலங்கை வருவது இதுவே முதன்முறை.

நாடொன்றில் ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிக்கும் தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர் பாப்பரசர் அந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதில்லை என்பதுவத்திக்கானின் மரபு. ஆட்சியாளர்கள், பாப்பரசரின் பயணத்தை தமது அரசியல் நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வதைத் தடுப்பதற்கான ஒரு வழிமுறை இது. இதன்படி பார்த்தால் பாப்பரசர் வந்து சென்ற பின்னர்தான் அதாவது, ஜனவரி 15 ஆம் திகதிக்குப் பின்னரே தேர்தல் அறிவிப்பை வெளியிட வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர், 35 தொடக்கம் 65 நாட்களுக்கு இடையில் ஜனாதிபதி தேர்தலை நடத்தலாம். அவ்வாறாயின் ஜனாதிபதித் தேர்தல் நடத்த மார்ச் மாதம் வரையாகிவிடும். ஆனால், அதுவரை பொறுத்திருப்பதற்கு அரசாங்கம் தாயாராக இல்லை.



எனவே, பாப்பரசரின் வருகையையும் பாதிக்காமல் அடுத்த ஆண்டு மார்ச், ஏப்ரல் என்று தேர்தல் தள்ளியும் போகாமல் இருக்க வேண்டும் என்றால் ஒரே வழி பாப்பரசரின் வருகைக்கு முன்னர், ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

பாப்பரசரின் வருகைக்கு முன்னதாக அதாவது, அடுத்த வருடம் ஜனவரி 13 ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதாயின் அதற்குரிய அறிவிப்பு வரும் நவம்பர் 19 ஆம் திகதிக்கு முன்னதாக வெளியிடப்பட வேண்டியிருக்கும்.

ஜனாதிபதியே தேர்தல் அறிவிப்பை வெளியிட வேண்டும். என்றாலும் அதற்குப் பின்னர் வேட்புமனு மற்றும் தேர்தல் திகதியை தீர்மானிக்கின்றவர் தேர்தல் ஆணையாளர் தான். அவர் 35 தொடக்கம் 65 இற்கு இடைப்பட்ட நாட்களுக்குள் தேர்தலை நடத்தலாம்.

எனவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் நான்காண்டு பதவிக்காலம் முடிவடைய முன்னர் அதற்குரிய அறிவிப்பை வெளியிட்டால்தான் அடுத்த ஆண்டு ஜனவரி 13 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்த முடியும். ஆனால், அவ்வாறு நான்கு வருடங்கள் முடிய முன்னரே தேர்தலுக்கு அழைப்பு விட முடியுமா என்று ஆராயும் பொறுப்பும் உயர்நீதிமன்றத்திடமே உள்ளது. இதற்கு உயர்நீதிமன்றத்தின் விதப்புரையை அரசாங்கம் கோரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் உயர்நீதிமன்றம் எடுக்கப்போகும் முடிபுதான் ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பதை தீர்மானிப்பதாக இருக்கும்.

அதேவேளை இன்னொரு சிக்கலும் இதற்குள் இருப்பதாகத் தெரிகிறது. அதாவது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மூன்றாவது தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் என்று முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கு அவர் கூறும் காரணம், 18 ஆவது அரசியலமைப்பு திருத்தம் உருவாக்கப்பட முன்னர் அரசியலமைப்பின் 3 1/2 பிரிவின் கீழ்தான், மஹிந்த ராஜபக்ச சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார் என்றும் எனவே, மூன்றாவது தடவை போட்டியிடும் தகுதி அவருக்கு இல்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இது ஒன்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சமீதான காழ்ப்புணர்ச்சியில் அவர் கூறிய கருத்தாகத் தெரியவில்லை. முன்னர்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும் சரத் என் சில்வாவுக்கும் இடையில் மனக்கசப்புகள், கருத்துவேறுபாடுகள் இருந்தன. இப்போது அப்படி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அவரது கருத்தை, சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது என்றே கருத வேண்டும்.

இந்நிலையில் மூன்றாவது தடவைதான், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா என்றுகூட ஒருவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உயர்நீதிமன்றத்தின் விதப்புரையைக் கோரலாம். உயர்நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்கும் விடயத்தில் அவர் அவ்வளவாகத் தயக்கம் காட்டுவார் என்று எண்ணுவதற்கில்லை. ஏனென்றால், 18 ஆவது திருத்தச்சட்டம் இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரத்தன்மையை கெடுத்துவிட்டது.

குறிப்பாக உயர்நீதிமன்றமே அரசாங்கத்தின் கைப்பாவையாகவும் அதன் தேவைகளை நிறைவேற்றும் ஒன்றாகவும் மாறிவிட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இத்தகைய நிலையில் நீதியை எதிர்பார்க்க முடியாது என்று முன்னர் உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்களாக இருந்தவர்களே வெறுப்புடன் கூறியிருக்கிறார்கள்.

அதிலும் தற்போது தலைமை நீதியரசராக இருக்கும் மொகான் பீரிஸ் முன்னர் சட்டமா அதிபராக இருந்தவர். இதுபோன்ற சாதகமான விடயங்கள் அரசாங்கத் தரப்பில் இருப்பதால்; எந்தச் சட்டச் சிக்கல்கள் குறித்தும் அலட்டிக்கொள்ளாமல் அரசாங்கமோ, ஜனாதிபதியோ உயர்நீதிமன்றத்தின் கருத்தை அறிய முற்படலாம்.

எனவே, ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுப்பதற்கு பெரிதான எந்த தடைகளும் ஏற்பட வாய்ப்பில்லை. அந்த துணிச்சல், முன்கூட்டியே தேர்தலை நடத்தும் துணிச்சலை அரச தர்ப்புக்குக் கொடுக்கலாம். அதுவும் வரும் செப்ரெம்பர் 20 ஆம் திகதி நடக்கவுள்ள ஊவா மாகாணசபைத் தேர்தலின் முடிபு ஜனாதிபதித் தேர்தல் பற்றிய முடிவுகளில் கூடுதல் தாக்கம் செலுத்துவதாக அமையும். ஏனென்றால் இந்த தேர்தலில் ஆளும் கட்சியின் வாக்கு வங்கி தொடர்ந்தும் சரிவது உறுதிப்படுத்தப்படுமானால் துரிதமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சிக்கும்.

போர் வெற்றி மாயைகள் உடைந்து வரும் நிலையில் ஊவா மாகாணசபைத் தேர்தலில் முன்னைய அளவுக்கு அரச தரப்பு வாக்குகளைப் பெற முடியாது என்பதால் பாப்பரசரின் வருகைக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புகள் இன்னும் அதிகமாகும் என்றே நம்பப்படுகிறது.

*-கே.சஞ்சயன்-*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்திடம் சாட்சியமளிப்பதே அர்த்த பூர்வமானதாக அமையும்

## மங்கள சமரவீர எம்.பி.சுட்டிக்காட்டு

***காணாமற் போனோரை கண்டறியும் ஆணைக்குழ செயற்பாடுகளின் சுயாதீன தன்மை இல்லை. தமிழ் மக்கள் மீது புலிச்சாயம் பூசும் நோக்கிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது என குறிப்பிடும் ஐ.தே.க.வின் எம்.பி மங்கள சமரவீர ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியமளிப்பதை விடவும் சர்வதேசத்திடம் சாட்சியம் அளிப்பது அர்த்தபூர்வமானது எனவும் தெரிவித்துள்ளார். காணாமற் போனோரை கண்டறியும் ஆணைக் குழுவின் அறிக்கை சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்படும் என ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ் வெல் பரணகம தெரிவித்துள்ளதையடுத்து வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.***



அவர் மேலும் தெரிவிகையில்,

காணாமற போனோரை கண்டறியும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில்நடுநிலைத்தன்மை இல்லை. அரசாங்கத்தையும் ஜனாதிபதி குடும்பத்தையும் தாம் செய்த குற்றங்களில் இருந்து விடுவிக்கவே இவ் ஜனாதிபதி ஆணைக்குழுவினை நியமித்துள்ளனர். வடக்கில் யுத்த கால கட்டத்தில் காணாமற் போன பொது மக்கள் தொடர்பில் கடந்த காலங்களில் இருந்த தகவல்களை சேகரிக்கின்றனர். ஆயினும் அவை தொடர்பிலான சாதாரண அறிக்கைகள் தொடர்பில் கூட இவர்கள் வாய் திறக்கவில்லை.

ஆணைக்குழ முன் சாட்சியளிக்கவோ அல்லது தமக்கு தெரிந்த உண்மைகளை வெளிப்படுத்தவோ அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தபடவில்லை என்பதுவே உணமை. புலனாய்வு பிரிவினரையும் இராணுவத்தினரையும் பொது மக்களுக்கு எதிராக செயற்பட வைத்து மக்களின் மனதில் அச்ச உணர்வினை ஏற்படுத்துகின்றனர். அதே போல் சர்வதேச விசாரணையென்று இலங்கைக்கு எதிராக செயற்பட ஆரம்பித்தவுடனேயே இலங்கை அரசாங்கமும் தமது ஆணைக் குழுவின் செயற்பாடுகளை விரைவுப்படுத்தியது.

யுத்தக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேசம் அழுத்தம் கொடுத்திருக் காவிடின் அரசாங்கம் இவ்விடயத் தில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டிருக் காது. வடக்கில் உள்ள தமிழ் மக் களை மீது புலிச்சாயம் பூசி தொடர்ந் தும் அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகளையே கையாண் டிருக்கும். யுத்த காலகட்டத்தில் காணாமற்போன பொதுமக்கள் தமது உறவுகளை கண் டறிய முடியும் என்ற ஒரே நம்பிக் கையுடனேயே ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் மக்கள் தகவல்களை தெரவிக்க முயற்சிக்கின்றனர். ஆயினும் அரசாங்கம் மக்களின் வேதனைகளை புரிந்து கொள்ளாது. தமது சுயநலத்திற்காக செயற்படுமாயின் மக்கள் இவ்வரசாங்கத்தை நம்புவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் வாக்குமூலம் அளிப்பதை விடவும் சர்வதேச வசாரணைக்குழுவினை நம்பலாம்.

இலங்கை விடயத்தில் நல்லதொரு தீர்வொன்றினை பெற்றுக் கொள்வதற்கான சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் அதை சரியாக பயன்படுத்த தவறுகின்றது. சர்வதேசத்தை எதிர்த்து தமது சர்வாதிகாரப் போக்கினை கையாள்வது இறுதியில் நாட்டின் மிக மோசமான விளைவொன்றினை ஏற்படுத்தி விடும்.

சர்வாதிகாரத்தை கையாண்ட நாடுகளின் நிலை இறுதியில் என்னவானது என்பது அனைவரும் உணர்ந்த விடயம். ஜனநாயகத்திற்கு எதிராக செயற்பட்டால் அர சாங்கத்தை மக்களே தண்டிப்பார்கள் எனவும அவர் மேலும் தெரிவித்தார். (6)

# குழிபறிப்புகளுக்கு மத்தியில் இயங்கும் வடமாகாண சபை

## ஆளும் தரப்பு உறுப்பினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மிகவும் குறைந்த அதிகாரங்களோடும் குறைந்த வளங்களோடும் அரசியல் குழிபறிப்புகளுடனும் இயங்கிக் கொண்டிருக்கும் எமது வடக்கு மாகாண சபை மூலம் தாயக மக்களுக்கு உச்சக்கட்ட சேவையை ஆற்றுவதுதான் எமது அடிப்படையான நோக்கமாகும் என வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை தம்பாட்டிப் பகுதியல் நேற்று முன்தினம் குடிநீர் விநியோக திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் நிலவி வரும் கடும் வரட்சி காலநிலையில் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலொன்றாக தீவகப்பகுதி விளங்கி வருகிறது. இயற்கையாகவே நன்னீர் வளம் குறைந்த இப்பகுதியில் தற்போது நிலவி வரும் கடும் வரட்சியும் மக்களை மிகவும் பாதித்து வருகின்றது. இப்பகுதி மக்கள் குடிநீருக்கு மிகவும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்ற சூழ்நிலையில் அண்மையில் தம்பாட்டி பிரதேசத்துக்கு நேரில் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டு, அப்பிரச்சினைகள் தற்காலிகமாகவேனும் நிவர்த்தி செய்யப்படும் என வடமாகாணசபை உறுப்பினர்கள் வாக்குறுதி வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில நாட்களுக்கு முன் இப்பிரதேசத்துக்கு வந்த போது, இம்மண்டபத்தில் வைத்து இப்பிரதேசத்துக்கான தற்காலிக குடிநீர் விநியோகத்தை எமது விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் உதவியுடன் மேற்கொள்வேன் என உறுதியளித்திருந்தேன். அதன்படி பத்து நாட்களுக்குள்ளாகவே எமது வடமாகாணசபை மூலம் இக்குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. இதற்கு எமது விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிற்கு தனிப்பட்ட ரீதியிலும், இம்மக்கள் சார்பிலும் எனது நன்றியறிதலைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிலும் குறிப்பாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினரான எம்மை மிகப் பெரிய அளவில் மக்கள் நம்பியிருக்கிறார்கள். அந்த மக்களின் நம்பிக்கைக்குப்பாத்திரமாக நடக்க வேண்டியது எங்களுடைய மிக முக்கியமான கடமை. அதிலும் குறிப்பாக விசேடமாக தீவகத்தின் ஊர்காவற்றுறைத்தொகுதி மக்கள் பல்வேறு நெருக்குவாரங்களையும் தாண்டி எங்கள் மீது வைத்திருக்கும் அந்த நம்பிக்கையை நாம் எப்பாடுபட்டும் காப்பாற்றுவோம் என்பதற்கான ஒரு அடையாளமாகத்தான் நான் இந்த நிகழ்ச்சியைக் கருதுகின்றேன். மக்கள் தமது பிரச்சினையை எம்மிடம் முறையிடுகிறார்கள்.

இது பிற பிரதேசங்களுக்கும் ஒரு முன்னுதாரணமான செயற்பாடாகவே நான் இதைக் கருதுகின்றேன் எனவும் தெரிவித்தார். (6)

# உகண்டாவிற்கு உதவும் அரசாங்கம் மக்களுக்கு உதவ மறந்துவிட்டது

வறட்சி ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு தண்ணீரை வழங்க திட்டமில்லாத அரசாங்கம், உகண்டாவின் தண்ணீர் பிரச்சினையை தீர்க்க நிதி வழங்கியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீ. ஹெரிசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். பாலஸ்தீனத்திற்கு நிதி வழங்கிய அரசாங்கம், வடமத்திய மாகாணத்தில் பல்வேறு பாதிப்புகளுக்குள்ளான மக்களுக்கு எதனையும் செய்யவில்லை எனவும் ஹெரிசன் தெரிவித்தார். (6)

# இன்று ஒரு தகவல்

## ஒரு விசித்திர வழக்கு!

இன்றைய உலகத்தில் சுவாரஸ்யமான சம்பவங்களெல்லாம் கண்முன் நடந்து கொண்டிருக்கிறது. பிரான்சில் நடந்த சம்பவம் இது. ஒரு பாறையில் கார்மோதி எரிந்து போய் விட்டது. அதில் போனவரும் காலியாகி விட்டார்.

உடனே பொலிஸ் அந்த இடத்துக்கு விரைந்து கார் நம்பரைப் பார்த்து ஆள் யார் என்று கண்டு பிடித்தார்கள். அவருடைய வீட்டுக்குத் தகவல் கொடுத்தார்கள். அந்த ஆளுக்கு ஒரு மனைவி... ஒரு காதலி, ஆக இரண்டு பேர். இருவரும் சண்டை பிடிக்காமல் ஒற்றுமையாக இருந்தார்களாம்.

நடந்த சம்பவத்தைக் கேள்விப்பட்ட இருவரும் உடனே கறுப்பு உடை அணிந்துகொண்டு விபத்து நடந்த இடத்துக்கு வந்தார்கள். கருகிப் போன சடலத்தைப் பார்த்தார்கள்.

அது எங்களுடைய கணவர் தான் என்று அடையாளம் காட்டினார்கள். அதன்பின் முறையான பிரேத பரிசோதனை நடந்து அந்த ஆள் விபத்தினால் இறந்து போனதாக அதிகாரிகள் கூறினார்கள். அவர்களும் சடலத்தை பொறுப்பேற்று எரித்து விட்டார்கள். இறந்து போனவர் மூன்று கம்பனிகளில் 8 ஆயுள் இன்சூரன்ஸ் பொலிஸி எடுத்திருந்தாராம்.

அதில் இரண்டு கம்பனிகள் அவருடைய மனைவிக்கு இன்சூரன்ஸ் பணத்தைக் கொடுத்து விட்டன. ஒரு கம்பனி மட்டும் கொடுக்காமல் கொஞ்சம் தாமதமாக்கிக் கொண்டே வந்தது.

அந்தக் கம்பனி தனியார் துப்பறியும் நிறுவனத்திடம் ஒரு துப்பறியும் நிபுணரை வாடகைக்கு அமர்த்தி அந்த ஆள், இறந்தவரின் மனைவியையும் – காதலியையும் கண்காணிக்கும் படி பணித்தது.

அந்த நிபுணர் விபத்து சம்பந்தமான குறிப்புக்களையெல்லாம் பார்த்தார். கார் தீப்பிடிக்க எந்தக் காரணமும் இல்லை என்பது தெரிந்தது. கருகிப் போன சடலத்தின் பல் அமைப்பு சம்பந்தமான குறிப்புகளையும் பார்த்தார்.

இறந்தவராகக் கூறப்பட்டவரின் மனைவியும் காதலியும் தொலைபேசி மூலமாக பேசிக் கொள்வதையெல்லாம் இரகசியமாக ஒட்டுக் கேட்டார். எல்லாவற்றையும் வைத்து கவனிக்கும் போது காரில் இறந்து போனது உண்மையிலேயே அந்த ஆள் இல்லை என்பது தெரிந்து விட்டது! அப்படியானால் அந்த ஆள் எங்கே?

அந்த ஆசாமிக்கு 46 வயது இருக்கும். அவனைக் காணவில்லையே... ஆனால், மனைவியுடனும் காதலியுடனும் வேறொரு இளைஞன் அடிக்கடி பேசுவதைக் கவனித்தார்கள்.

ஒரு நாள் திடீரென பிடித்து விசாரிக்கையில், இந்த இளைஞன் தான் அந்த ஆள் என்பது தெரிந்தது! என்ன விடயம் நடந்தது தெரியுமா? இந்த ஆள் முதலில் ஒரு ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கும் சிநேகிதனிடம் போய் ஏதாவதொரு அநாதை சடலம் கிடைக்குமா என்று கேட்டிருக்கிறான்.

இந்தச் சமயம் பார்த்து ஆஸ்பத்திரியில் அப்படி எதுவும் இருக்கவில்லை. உடனே இரண்டுபேரும் சேர்ந்து ஒரு பிளான் பண்ணி ஒரு பிச்சைக்காரனை அழைத்துவந்து அவனுக்கு அளவுக்கு மீறி தூக்க மாத்திரை கொடுத்து காலி பண்ணி... அவனைத் தனது காரில் வைத்து கொண்டு போய் ஒரு பாறையில் மோதவிட்டு தீயும் வைத்திருக்கிறார்கள்.

அதன் பின் அந்த ஆள் பிளாஸ்ரிக் சேர்ஜரி செய்து தன் முகத்தை அடையாளம் தெரியாமல் மாற்றி விட்டானாம். எப்படியிருக்கிறது இந்த ஏமாற்று வேலை?

அவன் திட்டம் மட்டும் நிறைவேறியிருந்தால் சுமாராக ஒரு எட்டுக்கோடி அவனுக்குக் கிடைத்திருக்கும். மாட்டிக் கொண்டதால் இப்பொழுது ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிறானாம்.

இந்தக் காலம் எப்படி இருக்கிறது என்றால்... தவறு செய்பவனும் புத்திசாலித்தனமாக அதைச் செய்கிறான். கொள்ளையடிப்பவனும் புத்திசாலித்தனமாகக் கொள்ளையடிக்கிறான். அதனால் நாம் அதைவிடப் புத்திசாலித்தனமாக இருந்து அதை சமாளிக்க வேண்டியிருக்கிறது.

(வெளிநாட்டில்) ஒரு அம்மா இன்சூரன்ஸ் கம்பனியைத் தேடி வந்தாராம். வந்து அங்கிருந்த அதிகாரியைப் பார்த்து, "ஏன் சார்... இன்றைக்கு எனது கணவரின் உயிரை இன்ஷூர் பண்ணிக் கொண்டு, நாளைக்கு அவர் செத்துப் போனால் எனக்கு ஏதாவது கிடைக்குமா?" என்று கேட்டிருக்கின்றார். 'கிடைக்கும்!' என்றார் அவர். "என்ன" என்று கேட்டார் இவர். 'ஆயுள்தண்டனை' என்றாராம் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் மாபெரும் போராட்டம்!

## அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் எச்சரிக்கை

சப்ரகமுவ பல்கலைக்கழக மாண வன் சந்திரகுமார் சுதர்சனை (வயது - 21) பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் விடுதலை செய்யா விடின் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களையும் ஒன்றிணை த்து நாடளாவிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டங்களை மேற்கொள் வோம் என்று அனைத்துப் பல் கலைக்கழக மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு, இச்சம்பவம் குறித்து அமைதியாகவே இருந்தால் இதே போல் எதிர்க்காலத்திலும் மாண வர்கள் தாக்கப்படும் அபாயம் காணப்படுவதாகவும் மாணவர் ஒன்றியம் மேலும் தெரிவித்துள் ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஊடக விலாளர் சந்திப்பு நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை மருதானை சி.எஸ்.ஆர். மண்டபத்தில் நடை பெற்றபோதே அதன் ஏற்பாட்டாள ரான நஜித் இந்திக்க மேற்கண் டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்,

கடந்த 9 ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் வைத்து தாக்கப்பட்ட சுதர்சன் என்ற மாண வன், தன்னைத் தானே தாக்கிக் கொண்டதாகக் கூறி பயங்கரவாத தடுப்புப் பொலிஸார் அம்மாணவ னைக் கைது செய்தது. இந்தச் சம்பவத்திற்கான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே உயர்க்கல்வி அமைச் சரும், பொலிஸ் ஊடகப் பேச்சா ளரும் அம்மாணவன் தன்னைத் தானே தாக்கிக் கொண்டதாகத் தெரிவித்தனர்.

அதுமட்டுமல்லாது, சம்பவம் நடைபெற்ற அன்று பலாங்கொடை பொலிஸார் முழு பல்கலைக்கழக த்தையும் சோதனைக்குட்படுத்தி னர். ஆனால், அப்போதெல்லாம் கிடைக்காத பிளேட் மற்றும் கட் டைத்துண்டுகள் சம்பவம் நடை பெற்று 7 நாட்களுக்குப் பின்னர் குறித்த இடத்திலிருந்து கிடைத் துள்ளன.

மேலும் பலாங்கொடை வைத்திய சாலையின் வைத்திய அறிக்கை யின் பிரகாரம், இம்மாணவனுக்கு பேப்பர் கட்டர் எனப்படும் ஆயுதத் தாலே தாக்குதல் நடத்தப்பட்டுள்ள தாகவும், இதை வேறு ஒருவரே செய்துள்ளதாகவும் பலாங்கொடை பொலிஸார் மூலம் எமக்கு அறி விக்கப்பட்டது. ஆனால், கொழும் பிற்குக் கொண்டு சென்றவுடன், பேப்பர் கட்டர் பிளேடாக மாறி விட்டது.

அதுமட்டுமல்லாது, மாணவ னும் தன்னைத் தானே தாக்கிக் கொண்டதாக வைத்திய அறிக்கை யிலுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். இது எப்படி சாத்திய மாகும்? நாட்டில் 30 வருடங்களாக யுத்தம் நடைபெற்ற போதிலும், பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் ஜாதி, மதம், மொழி, பேதம் பாராமல் ஒற்றுமையாகவே பழகினோம்.

ஆனால்,இதுபோன்ற சம்பவங் களுக்குப் பின்னால் நிச்சயமாக அரசியல் தலையீடு உள்ளதை தற் போது எம்மால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இல்லையெனில், விசாரணை க்கு முன்னரே மாணவன் தன் னைத் தானே தாக்கிக் கொண் டதாக உயர் கல்வியமைச்சரும், பொலிஸ் பேச்சாளரும் கூறுவார் களா? அல்லது 7 நாட்களுக்குள் மருத்துவ அறிக்கை மாற்றமடை யுமா? இந்தச் சம்பவத்தை மக்களும சிந்தித்துப் பார்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பொலிஸார் 'ஸ்பீட்கன்' பயன்படுத்த முடியாது



இலங்கையில் அளவுக்கு அதிக மான வேகத்தில் செல்கின்ற வாக னங்களை பிடிப்பதற்கு ராடார் வேகக் கருவிகளை பயன்படுத்தக் கூடாது என்று போக்குவரத்துப் பொலிஸாருக்கு உச்சநீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது.

எனினும், கவனயீனமாகவும் அபா யகரமாகவும் பயணிக்கின்ற வாகன ங்களை பிடிப்பதற்கு இந்தக் கருவி களை போக்குவரத்து பொலிஸார் இது வரை பயன்படுத்திவந்துள்ளனர்.

தற்போது அதற்கும் ராடார் வேகக கண்காணிப்புக் கருவிகளை பயன் படுத்த முடியாதவாறு புதிய உத்தர வொன்றை பொலிஸ் தலைமைய கம் விடுத்துள்ளது. (இ)

# நல்லிணக்க குழு அங்குரார்ப்பணம்

பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறு வனங்களின் சம்மேளனத்தினால், காத்தான்குடியில் இன நல்லிணக்க குழுவொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மே ளனத்தின் கீழ் செயற்படும் வகை யில் இந்த இன நல்லிணக்க குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக காத்தான் குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் செயலாளர் அஸ்ஸெய்ஹ் ஏ.எல். எம்.சபீல் நழீமி தெரிவித்தார்.

இந்த இன நல்லிணக்க குழு வின் தலைவராக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் யு.எல்.எம்.என். முபீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

15 பேரைக் கொண்ட இந்த நல் லிணக்க குழு, மட்டக்களப்பு மாவட் டத்திலும் காத்தான்குடி மற்றும் அதனை அண்மித்துள்ள பிரதேச ங்களின் இன நல்லிணக்கத்தையும் இன ஐக்கியத்தையும் மேம்படுத்தும வகையிலான பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ள தாக சம்மேளனத்தின் செயலாளர் அஸ்ஸெய்ஹ் தெரிவித்தார். (இ)

# புலிப்பார்வை பார்த்த மாணவர்களை தாக்கியவர்கள் கைதாக வேண்டும்



புலிப்பார்வை என்ற பெயரில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப் படம், தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பால ச்சந்திரன், தன்னைப் போன்ற சிறு வர்களை சேர்த்துக் கொண்டு விடு தலைப்புலிகள் சீருடை அணிந்து பயிற்சி எடுப்பதைப் போன்ற காட் சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

இக்காட்சிகள் உண்மைக்குப் புறம்பானவை. போரில் ஈடுபடாத அப்பாவிச் சிறுவன் பாலச்சந்திரனை, கைதொடும் தூரத்தில் வைத்து சுட்டுக் கொன்றனர் என்பதையே இயக்குநர் கெலம் மெக்ரே, பன்னா ட்டுத் தரவுகளுடன் எடுத்த ஆவணப் படம் உறுதிப்படுத்தியிருந்தது.

இத்திரைப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா, கடந்த 16 ஆம் திகதி சென்னை சத்தியம் திரை யரங்கில் நடந்த போது, மேற்படி உண்மைக்குப் புறம்பான காட்சி பற்றி தமிழினவுணர்வுள்ள மாண வர்கள் கேள்வி எழுப்பினர். அப் போது, அப்படத்தின் தயாரிப்பு நிறு வனமான வேந்தர் மூவீஸ் நிறுவ னத்தைச் சேர்ந்தவர்கள் மாண வர்களைத் தாக்கி காயப் படுத்தி யுள்ளனர். இந்த வன்செயலை தமி ழ்த் தேசியப் பேரியக்கம் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கேள்வி கேட்ட மாணவர்களு க்கு உரிய விடையளித்து அவர் களை அமைதிப்படுத்துவதற்கு மாறாக, திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களைத் தாக்கி தரதரவென்று இழுத்து வெளியில் கொண்டு போகு ம்போது, பொலிஸார் தலையிட்டு அம்மாணவர்களை கைது செய்து, மருத்துவ சிகிச்சைக்குக் கூட வாய்ப்ப ளிக்காமல் ஒருநாள் முழுக்க அடை த்து வைத்து, மாலையில் விடுவித்திருக் கிறார்கள். பொலிஸாரின் இந்த அணுகுமுறை கண்டனத்திற்கு ரியது. அந்த வன்முறையில் ஈடு பட்ட அனைவர் மீதும் வழக்குப் பதிவு செய்து, அவர்களைக் கைது செய்யுமாறு தமிழ்த் தேசியப் பேரி யக்கத்தின் சார்பில் தமிழக அர சைக் கேட்டுக் கொள்கிறேன் என அவ் அமைப் பின் தலைவர் பெ. மணியரசன் கோரிக்கை விடுத்து ள்ளார். (இ)

பாக்.தூதுவர் பிரிவினைவாதிகளுடனான சந்திப்பையடுத்து

# இந்தியா-பாகிஸ்தான் பேச்சுவார்த்தை ரத்து



இந்தியாவிற்கான பாகிஸ்தான் தூதர் புதுடில்லியில் காஷ்மீர் பிரிவினைவாத தலைவர்களை சந்தித்ததை அடுத்து, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே நடைபெறுவதாக இருந்த வெளி யுறவுச் செயலாளர் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளை இந்தியா இரத்துச் செய்துள்ளது.

பாகிஸ்தான் தூதரின் இந்தச் சந்திப்பு பல கேள்விகளை எழுப் பியுள்ளது என்றும், இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் இது ஒரு குறுக்கீட்டை ஏற்படுத்தியுள்ளது என்றும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் சையத் அக்பருத்தின் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் உள்நாட்டு விவ காரங்களில் பாகிஸ்தான் தலை யிடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று இந்தியாவுக்கான பாகிஸ் தா னிய தூதர் அப்துல் பசித்திடம் இந் திய வெளியுறவுத் துறை செயலா ளர் சுஜாதா சிங் தெரிவித்துள் ளதாகவும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள் ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவிற்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரிப் க்கு அழைப்பு விடுத்து இந்தியா முன்னெடுத்த இரு நாடுகளுக்கு இடையேயான இராஜதந்திர ஈடு பாட்டை, பாகிஸ்தான் தூதரின் தற்போதைய நடவடிக்கை சீர் குலைத்துள்ளது என்றும் வெளியு றவுத் துறை செயலாளர் சுஜாதா சிங் பாகிஸ்தானிய தூதரிடம் தெரி வித்துள்ளார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தா னுக்கு இடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகை யில் பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்தில் இரு நாட்டு வெளியுறவுச் செயலாளர்களும் எதிர்வரும் எதிர்வரும் 25ஆம் திகதி அன்று பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தது.

தற்போதைய சூழ்நிலையில் இந்திய வெளியுறவுத் துறை செய லாளர் இஸ்லாமாபாத் செல்வதால் எந்த பயனும் இல்லை என்று தெரி வித்துள்ள இந்திய வெளி யுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் சையத் அக்ப ருத்த ின், பேச்சுவார்த்தைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித் துள்ளார்.

கடந்த காலத்தில் பாகிஸ்தான் தூதரகம் காஷ்மீர் பிரிவினைவாத தலைவர்களுடன் பல முறை பேச்சு வார்த்தைகளை நடத்தி வந்துள் ளது. எனினும் வெளியுறவுச் செய லாளர் மட்டத்திலான பேச்சுவார த் தைகள் நடக்கவிருக்கும் சமய த்தில் நடந்திருக்கும் இந்த சந்திப்பு ஆளும் பாரதீய ஜனதா கட்சியிட மிருந்தும் காங்கிரஸ் கட்சியிட மிருந்தும் கடும் எதிர்ப்புகளை எழுப்பியுள்ளது.

கடந்த சில தினங்களாக இந்திய எல்லையில் பாகிஸ்தான் இராணு வம் தொடர்ந்தும் அத்துமீறி தாக்கு தல்களை நடத்தி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்தோடு பயணித்த ஆசானை நாம் இழந்து விட்டோம்

## சிறிதரன் எம்.பி. இரங்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியத்தின் அபிமானியும் மாணவர்களின் மனங் கவர்ந்த பொருளியல் ஆசானுமான வரதராஜனின் மறைவையொட்டி பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார்.

வரதராஜன் ஆசிரியரின் மறைவை கேட்டு அதிர்ச்சியடைந்தேன். சில நாட்களுக்கு முன் அவரை வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டபோது சில வார்த்தைகள் அந்த பெரும் ஆசான் என்னோடு பேசி இருந்தார். அது இறுதி வார்த்தைகள் என்பதை உணரமுடிந்தது.

எங்களோடு நெடுங்காலம் வாழ வேண்டிய மனிதர்களில் வரதராஜன் மிக முக்கியமானவர். அவரிடம் மாணவனாக இருந்திருக்கின்றேன். அவரிடம் மாணவனாக இருந்த காலங்கள் என் வாழ்வில் பொற்காலங்கள். வரதராஜன், பொருளியல் மாணவனாக இருக்கின்ற ஒவ்வொரு மாணவனுக்கும் அக்காலங்கள் பொற்காலங்கள் என்பது மறுக்க முடியாத யதார்த்தம். அவரிடம் கற்றவர்கள் பொருளியலை ஆய்வுக் கண்ணுடன் பார்க்கும் பேராற்றலை பெற்றுக்கொள்வார்கள்.

மதிப்பிற்குரிய வரதராஜன் மறைந்துவிட்டார் என்பது பல கல்விமான்களுக்கு அதிர்ச்சி தரும் செய்தி. ஏனெனில் அவர் வெறுமனே பொருளியல் ஆசானாக மட்டும் வாழ்ந்ததில்லை.

தமிழ் மண்ணின் எதிர்கால கனவு பொருளியல் கட்டமைப்பை உருவாக்குவதில் உழைத்தவர். தமிழ்த் தேசியத்தோடு பயணித்தவர். அதற்காக தேய்ந்தவர். வாழ்ந்தவர்.

துயர் சுமந்த எமது மண்ணின் வரலாற்றில் வரதராஜன் ஆசிரியரும் விடுதலைக்காக துயர்களை சுமந்தார் என்பதே வரலாறு.

இறுதி வரை தேசியத்தின் விசுவாசியாக அதற்காக சிந்தித்தவராக வாழ்ந்த அந்த மனிதருக்கு எமது மக்கள் சார்பில் வணக்கத்தையும் அவரது குடும்பத்துக்கு ஆறுதலையும் தெரிவிக்கின்றேன் என அவரின் இரங்கல் செய்தியில் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# இலங்கையர் ஒருவர் சார்ஜாவில் மரணம்

(கொழும்பு)

சார்ஜாவில் பணிபுரியும் இலங்கையர் ஒருவர் தனது அறையில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு எமிரேட்ஸிலுள்ள அறையொன்றில் குறித்த இலங்கையர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக அவருடன் பணியாற்றும் சக ஊழியர்கள் கண்டு தெரிவித்ததாகவும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பணியாளரின் இறப்புக்கான காரணத்தை அறிய பிரேத பரிசோதனைகளுக்காக இவரது சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (இ)

# கண்டி இராச்சியத்திற்குரிய வாளே களவாடப்பட்டுள்ளது

## தொல்பொருள் திணைக்களம் தகவல்

ஹட்டன் பகுதியில் 100 ஆண்டுகள் பழைமைவாய்ந்ததாக நம்பப்படும் புராதன வாளுடன் மூவர் பொலிஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர் இந்நிலையில் குறித்த வாள் பல வருடங்கள் பழமை வாய்ந்த கண்டி இராச்சியத்திற்குரியது என தொல் பொருள்துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த வாளை விற்பனை செய்ய முயன்ற 3 சந்தேக நபர்கள் கடந்த 07ஆம் திகதி இரவு ஹட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஹட்டன் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்கு மாறும் மேற்படி வாளை பற்றி விசாரணைகளை நடத்தி ஹட்டன் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் தொல்பொருள துறை திணைக் களத்திற்கு ஹட்டன் நீதி மன்றத்தின் நீதவான் அமில ஆரியசேன உத்தரவிட்டிருந்தார்.

அந்தவகையில் தொல் பொருள்துறை திணைக்களம் குறித்த வாளை பற்றி ஆராய்ச்சி செய்து இநத வாள் பல வருடத்திற்கு பழைமை வாய்ந்த கண்டி இராச்சியத்திற்குரியது என அறிவித்துள்ளது.

மஸ்கெலியா பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு வீடு ஒன்றில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டதாக நம்பப்படும் வாள் வெள்ளி மற்றும் பித்தளை போன்ற உலோகங்களால் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வாளை 36 இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்ய முற்படுகையில் சந்தேக நபர்கள் மூவரும ஹட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இரண்டரை வயது தமிழ்ச் சிறுவனின் அபரிமிதமான அறிவில் உலகமே வியப்பில்

**170 நாட்டு தேசிய கொடிகளை அடையாளம் காட்டும் இரண்டரை வயது தமிழ்ச் சிறுவன் இந்தியாவின் தமிழகத்தை சேர்ந்தவன்**

அமெரிக்காவில், இரண்டரை வயது சிறுவன் ஒருவன் 170இற்கும் மேற்பட்ட நாடுகளின் தேசிய கொடிகளை சரியாக அடையாளம் காட்டி பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளான்.

தமிழகம், தருமபுரியை பூர்வீக மா கக் கொண்ட ஜோதிபிரசாத்-சரண்யா தம்பதியின் ஒரே மகனான இஷாந்த் என்ற சிறுவனே இத்தகைய திறமையுடன் மிளிர்கின்றான்.இச்சிறுவன், அமெரிக்கா, அரி சோனா மாகாணம் போனிக்ஸி லில் தனது பெற்றோருடன் வசித்து வருகிறான்.

இரண்டரை வயதான இந்தச் சிறுவன் இன்னும் பாடசாலையில் சேர்க்கப்படவில்லை. இருப்பினும் 170 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தேசிய கொடிகளைக் காட்டினால் கொடிக்கான நாட்டின் பெயரை சரியாக கூறுகின்றான்.

அதேபோல தமிழ் உயிர் எழுத்துகள், எண்கள், ஆங்கில எழுத்துகள் ஆகியவற்றை எப்படி கலைத்துக் கொட்டினாலும் அவற்றை வரிசைப்படி அடுக்கி வைக்கிறான்.

கணிதத்தில் வரும் வட்டம், சதுரம், அரை வட்டம், செவ்வகம், அறுகோணம் உள்ளிட்ட உருவங்களைக் காட்டினாலும் துல்லியமாகக் கூறுகிறான்.

இதுதவிர ஆங்கில மாதங்களை வரிசைப்படி கூறுதல், உலக வரைபடத்தில் தேசங்களை அடையாளம் காட்டுதல் என அதிதிறமைசாலியாக இச்சிறுவன் காணப்படுகின்றான்.

மடிக்கணனியில் அமெரிக காவின் வரைபடத்தில் உள்ள 50 மாகா ணங்களையும் ஒன்றாக குவித்து வைத்து அந்த துண்டுகள் ஒவ்வொன்றையும் எடுத்து அதற்கே உரிய இடங்களில் பொருத்தி அமெரிக்காவின் முழு உருவத்தையும் அமைத்து விடுகிறான்.

அம்மா இங்கே வா வா... பாடலில் தொடங்கி சுப்ரபாதம் உள்ளிட்ட சில பக்தி பாடல்கள் வரை அழகான மழலையில் பாடி அசத்துகிறான்.

இப்படி இஷாந்தின் பிரமிக்க வைக்கும் பட்டியல் நீண்டு கொணடே செல்கிறது.

தருமபுரியில் வசிக்கும் தனது தாத்தா பாட்டியான ராமசாமி-மங்களா வீட்டுக்கு தாய் சரண்யாவுடன் சிறுவன் இஷாந்த் வந்துள்ளான்.

4 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் செய்யும் அனைத்து [illegible] களையும் இஷாந்த் [illegible]



செய்து அசத்துவதைக் கண்டு அவனது குடும்பத்தாரும் உறவி னர்களும் வியப்பில் ஆழ்ந்துள்ளனர்.

“இஷாந்த் 11 மாத குழந்தையாக இருந்தபோதே 3 வண்ணங்களை சரியாக தெரிந்து வைத்துக்கொண்டு அடையாளம் காட்டுவான். அதைப் பார்த்து நானும் என் கணவரும் தொடர்ந்து இஷாந்தை ஊக்கப்படுத்தி வந்தோம். அவனுக்கு பொம்மைகளுக்கு பதிலாக கற்றல் தொடர்பான பொம்மைகள், புத்தகங்களைத் தான் இதுவரை வாங்கிக் கொடுத்துள்ளோம்“ என இஷாந்தின் தாய் சரண்யா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நாங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள பள்ளியில் அவனை அழைத்துச் சென்றபோது 5 வயது குழந்தைகளுக்கு உரிய நுண்ணறிவு இஷாந்துக்கு இருப்பதாகக் கூறினர்.

இஷாந்துக்கு நல்ல ஊக்கம் கொடுத்தால் சிறந்த அறிவாளியாக வருவான் என்றும் அவர்கள் ஆலோ [illegible] (இ)

# பிரிவுத்துயர் பகிர்வு

### கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகர்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு ஜெயவர்த்தன மலர்சாலையில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பொறளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சிவலோகநாதன் பாக்கியரத்தினம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலோகநாதன் பாக்கியரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்- அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை ) கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு கெரவலப்பிட்டிய பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சிவஞானம் சோமசுந்தரம்



முல்லைத்தீவு ஒட்டுசுட்டானைப் பிறப்பிடமாகவும் வவுனியா நெடுங்கேணி உக்கிளாங்குளம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் சோமசுந்தரம் கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு உக்கிளாங்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தட்சணாங்குளம்இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சிற்றம்பலம் சிறீஸ்கந்தராஜா



சுருவில், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிறீஸ் கந்தராஜா கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சிற்றம்பலம் மாணிக்கவாசகர்



வளலாயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் மாணிக்க வாசகர் (ஓய்வு பெற்ற அதிபர்) கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வளலாய் இந்து மயானத்ஸ்ரீதில் தகனம் செய்யப்படும்.


### சின்னத்துரை வரதராஜன்



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை - வரதராஜன் (பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல் கலைக்கழக விரிவுரையாளர்) நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### அருட்பணி தேவதாசன் எட்வின்



மன்னார் விடத்தல்தீவினைப் பிறப்பிடமாகவும் அமல மரித்தியாகிகள் துறவற சபையை சேர்ந்தவருமான அருட்பணி தேவதாசன் எட்வின் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### தம்பிஜயா மகேந்திரநாதன்



வவுனியா இரம்பைக்குளம் கந்தசாமி வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Kassel,Baunatal ஆகிய இடங்களை வசிப்பிட மாகவும் கொண்ட தம்பிஜயா மகேந்திரநாதன் கடந்த15 ஆம்திகதி வெள்ளிக்கிழமைஅன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு Friedhof Grossenritte,Kasseller Strasse 18, 34225 Baunatal,Germany என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 கோடியே 93 இலட்சம் ரூபா நிதி வாழ்வாதாரத்திற்கென ஒதுக்கீடு

## கிளி. மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

வன்னி யுத்தத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்களில் தெரிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 18 கோடியே 93 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா வாழ்வாதார உதவி அபிவிருத்தி திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அருணாசலம் விஜயகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்வாதார அபிவிருத்தி திட்ட நிதியுதவி 6 ஆயிரத்து 599 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நடப்பாண்டில் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை யான காலப் பகுதியில் விவசாயம், மீன்பிடி, சிறுவியாபாரம், சிறுகைத் தொழில், தொழில் பயிற்சி மற்றும் பெண் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான உதவியாகவே மேற்படி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இதில் ஆயிரத்து 935 குடும்பங்களுக்கு மாடு, ஆடு, கோழி வளர்ப்பினை மேற்கொள்ள 56 இலட்சம் ரூபாவும் விவசாயம் மேற்கொள்ளும் 2 ஆயிரத்து 419 குடும்பங்களுக்கு 66 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் சிறு வியாபாரம் செய்யும் ஆயிரத்து 88 குடும்பங்களுக்கு 33 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் மீன்பிடி தொழிலை விருத்தி செய்ய 462 குடும்பங்களுக்கு 12 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் சிறு கைத் தொழிலை மேற்கொள்வதற்கு 661 குடும்பங்களுக்கு 20 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவும் தொழில் பயிற்சி மற்றும் தொழில் முயற்சிக்காக 34 குடும்பங்களுக்கு 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 6 ஆயிரத்து 599 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 18 கோடியே 93 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பெண் தலைமைத்துவ குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 397 பெண்களுக்கு தலா 69 ஆயிரம் ரூபா கொண்ட வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுகின்றது.

இதில் 10 ஆயிரம் அவர்களது வங்கிக் கணக்கில் ஆரம்ப வைப்பாகவும் பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 13 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 23 ஆயிரம் ரூபாவினை வங்கியில் வைப்புச் செய்த பின் மிகுதிப் பணம் அவர்களது வாழ்வாதார உதவி வேலைத் திட்டங்களுக்கு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




## மின்னல் தாக்கி குடும்ப பெண் படுகாயம்

(கனகபுரம்)

வீட்டு முற்றத்தில் நின்ற குடும்பப் பெண் ஒருவர் மீது மின்னல் தாக்கியதில் அவர் காலில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தாயாராகிய தேவரூபன் புஸ்பலதா (வயது 31) என்பவரே சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இராமநாதபுரம் வட்டக்கச்சியில் இடம்பெற்றது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

கிளிநொச்சியில் பெய்த மழையினையடுத்து இடி மின்னல் ஏற்பட்டது.

இந்நிலையில் குறித்த குடும்பப் பெண் வீட்டின் முற்றத்தில் நின்றுள்ளார். இதன்போது ஏற்பட்ட மின்னலால் பிரஸ்தாப பெண் காலில் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார். இதனையடுத்து அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார். (2-259)

# முல்லை. துணுக்காய் பிரதேச செயலகத்தில் சுற்றுலா நீதிமன்றமும் மத்தியஸ்தர் சபையும்

## செப்டெம்பர் 3 இல் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி முதல் துணுக்காய் பிரதேச செயலக கட்டடத்தில் சுற்றுலா நீதிமன்றமும் மத்தியஸ்த சபையும் இயங்கும் என முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவின் மத்தியஸ்த சபையை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா செப்டெம்பர் 3 ஆம் திகதி ஆரம்பித்து வைப்பார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் விடாமுயற்சியை அடுத்தே சுற்றுலா நீதிமன்றமும் மத்தியஸ்த சபையும் அமையவுள்ளமை பொதுமக்களுக்குகிடைக்கப்பெற்றஅதிஷ்டமாகும்.

அன்றையதினம் பிரதேச செயலக கட்டடத்திலேயே சுற்றுலா நீதிமன்றம் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் துணுக்காய், மாங்குளம் மல்லாவி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களின் வழக்கு விசாரணைகள் துணுக்காய் பிரதேச செயலக கட்டடத்தில் இடம்பெறும் என முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மேலும் மத்தியஸ்த சபையை ஆரம்பித்து வைப்பதன் மூலம் மிக நீண்ட தூரம் தமது வழக்குகளுக்காக பயணம் செய்து வழக்குகளுக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தை நாடும் பொதுமக்கள் தமது பிணக்குகளையும் காசு, காணி தொடர்பான பிரச்சினைகளையும் மத்தியஸ்த சபைமூலம் தீர்த்துக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்களுக்கு சுற்றுலா நீதிமன்றம் இயங்கவுள்ளமையும் பெரும்வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் துணுக்காய் பிரதேச செயலக கட்டடத்திற்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி வழக்குகளுக்காக வருகை தர வேண்டுமென முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவித்துள்ளது. (2)



தற்போது பெய்து வரும் மழையினை தொடர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் முகமாக வவுனியா நகர மீனவ சங்கத்தின் ஏற்பாட்டில் பொங்கல் நிகழ்வு வவுனியா குடியிருப்பு குளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது மீனவர்கள் பொங்கல் நிகழ்வில் ஈடுபடுவதை படத்தில் காணலாம். (பட்ம்: குருமன்காடு செய்தியாளர்)

# கிளிநொச்சியில் நடைபெற்ற தொழுநோய் கருத்தரங்கு



(கிளிநொச்சி)

தொழுநோய் தடுப்பு தொடர்பான ஊடகவியலாளர் கருத்தரங்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

தாய், சேய் நல மருத்துவ அதிகாரி டாக்டர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச சுகாதார வைத்தியசாலை அதிகாரி க.தர்சானந்தன், வடமாகாண பொதுசுகாதார மேற்பார்வை பரிசோதகர் மு.சிவபாலன், சுகாதார கல்வி உத்தியோகத்தர் கே.ரி. தயாளன் ஆகியோர் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அதனை எமது நாட்டிலிருந்து முற்றாக இல்லாமல் செய்வதற்கும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதை தெளிவுபடுத்தினார்கள்.

இக்கலந்துரையாடல் நிகழ்வில் அனைத்து ஊடகவியலாளர்களும் பங்கேற்றதோடு இத்தகைய நிகழ்வுகளை தொடர்ச்சியாக நடத்துவதன் மூலம் ஊடகங்கள் வாயிலாக மக்களை விழிப்படையச் செய்ய முடியுமென கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இலங்கையைப் பொறுத்தவரையில் தொழுநோயானது மிகக் குறைந்தளவே காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளபோதும் இதனை வெளிப்படையாக தெரிவித்து மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு மக்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

அத்தகைய நிலையில் இருந்து மாற்றம் பெற முடியுமென அவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டுமெனவும் சாதாரணமாக இந்த நோய் ஆரம்பத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாக உணராத போதும் நாளடைவில் இந்நோயின் தாக்கத்தால் கைகள், கால்கள் மற்றும் நரம்புகளில் பாதிப்பு ஏற்படுவதோடு அங்கவீனமான நிலையை ஏற்படுத்தி விடும் என மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டு இதனை ஊடகங்கள் மூலமாக மக்களுக்கு தெளிவுபடுத்தி இந்நோயை முற்றாக இல்லாதொழிக்க வேண்டுமென்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (2-254)

# நல்லூர் கந்தன் ஆலயம் நோக்கி பக்தர்கள் பாதயாத்திரை

## நூற்றுக்கணக்கானவர்கள் இணைவு

(குருமன்காடு)

நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழாவையொட்டி உற்சவகால பாதயாத்திரையொன்று ஆரம்பமாகியுள்ளது.

இந்தப்பாதயாத்திரை வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இருந்து நான்காவது வருடமாக நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

குறித்த உற்சவகால பாதயாத்திரையானது வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் சாமி அம்மா தலைமையில் ஆரம்பமானது.

நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் பாதயாத்திரையில் பங்கேற்றுள்ளனர்.

யாத்திரையை ஆரம்பித்துள்ள இவர்கள் ஏ-9 வீதியிலுள்ள ஆலயங்களைத் தரிசித்து தங்கிச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் யாத்திரை மேற்கொள்பவர்கள் தங்கிச் செல்லும் இடங்களில் இருந்தும் பல அடியார்கள் இவர்களுடன் இணையவுள்ளனர்.

குறித்த உற்சவகால பாதயாத்திரையானது எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தேர்த் திருவிழாவின் போது நிறைவடையும்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தம், வவனியா அந்தணர் ஒன்றிய செயலாளர் பிரபாகரக்குருக்கள் உள்ளிட்ட அந்தணப்பெருமக்கள் தமிழருவி த.சிவகுமார் உள்ளிட்ட பெருமளவிலான பக்த அடியார்கள் கலந்து கொண்டனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதிக்கும் வெற்றிகள் உண்டு. அவை போரின் வெற்றிகளைவிடப் புகழில் குறைந்தவை அல்ல.

~ மில்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஆசான் வரதராஜன் தமிழினத்தின் ஆத்ம பலம்

பொருளியல் ஆசானும் தமிழ்ப் பற்றாளருமாகிய வரதராஜன் அவர்கள் காலமாகிவிட்டார் என்றசெய்தி தமிழ் உள்ளங்களை நிச்சயம் நெருடச் செய்யும்.

'பொருளியல்' என்பதை தனது அணிகலனாகக் கொண்ட ஆசான் வரதராஜன் பல்லாயிரக்கணக் கான மாணவர்களை உருவாக்கிய பெருமைக் குரியவர். அவரிடம் பொருளியலைக் கற்ற – கற்கின்ற மாண வர்கள் பாக்கியம் செய்தவர்கள் என்று கூறுமள வுக்கு அவரின் கற்பித்தல் திறன் அளப்பரியது.

எல்லா மாணவர்களையும் சமமாக நோக்கும் பெருந் தன்மை பொருந்திய வரதராஜன் அவர்கள் ஒரு பண் பாளராக; நேர்மையாளராக; உத்தமராக வாழ்ந்தவர்.

அந்த வாழ்வியல், மாணவர்களுக்கு அவர்மீது அளப்பரிய மரியாதையையும் பக்தியையும் ஏற்படுத்தி யிருந்தது.

பொருளியலை ஒரு பாடமாகக் கற்பிப்பதை மட்டும் தனது கடமையாகக் கொள்ளாமல் பொருளியல்துறை யில்தான் பெற்ற அறிவியலை – அனுபவத்தை எங்கள் தமிழ் மண்ணுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும் எனக் கடுமையாகப் பாடுபட்டவர்.

காலசூழல்கள் அவருக்கு நல்லதொரு களத்தை அமைத்துக் கொடுக்கவில்லை. எனினும் தமிழ் மக் களின் பொருளாதாரம் பலமடைய வேண்டுமாயின், பொருளியல் சிந்தனைகள் தமிழ் மண்ணில் விதைக் கப்பட வேண்டுமாயின், அதற்கு தமிழினம் சுதந்திரத் தின் அனுபவிப்புக்கு ஆளாக வேண்டும் என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்தியவர்.

அவரின் இத்தகைய வெளிப்படுத்தல்கள் அவரை சிறை செல்லவும் அங்கு வதைபடவும் வைத்தது. இருந் தும் தனது கொள்கையில் அவர் மிகவும் இறுக்க மாக இருந்தார் என்ற செய்தி தமிழ் மண்ணின் வர லாற்றுப் பக்கத்தில் பதிவுக்குரிய அம்சமாகும்.

பொருளியல் நிபுணத்துவமுடைய ஆசான் வரத ராஜன் அவர்கள் நினைத்திருந்தால் இலங்கையின் ஆட்சிபீடங்களோடு சேர்ந்து மிக உயர்ந்த இடத்தில் உயர்ந்த அனுபவிப்புக்களோடு வாழ்ந்திருக்க முடியும்.

ஆனால் அவர் தனது இனத்துக்காக, தனது மண் ணிற்காக, தனது மக்களுக்காக வாழ்ந்தார். அத னால் சிறை சென்று மீண்டபோதிலும் தனது கொள் கையைக் கைவிடாது தொடர்ந்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்து வதில் அது தொடர்பில் தமிழ் அரசியலை வழிப்படுத்து வதில் ஆசான் வரதராஜன் கொண்டிருந்த வகிபாகம் அவரின் துணிச்சலைமட்டுமன்றி, தமிழ் மக்களுக் காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்ததன் சாட் சிப்படுத்தலாகவும் நாம் குறிப்பிட முடியும்.

அவரின் திடீர் மரணம் ஒரு நேர்மையான புத்தி ஜீவியின் இழப்பாக – தமிழ் மக்களை – இனவிடு தலையை – உரிமையை நேசித்த ஓர் உண்மையான ஆத்ம பலத்தின் இழப்பாக தமிழ்த்தாய் துயரம் கொள் கிறாள்.

போலித்தனங்கள் மலிந்து உருத்திரதாண்டவம் ஆடுகின்ற இன்றைய எங்கள் சூழ்நிலையில் அடக் கமான – அமைதியான – புகழுரை விரும்பாத – தமிழினத்தை ஆழமாக நேசித்த ஆசான் வரதரா ஜனின் இழப்பு தமிழினத்தின் துன்பத்தை மேலு மொருபடி உயர்த்திவிட்டது.

ஆம்! பொருளியல்துறையில் எண்ணற்ற மாணவர் களை உருவாக்கிய பெருமையும் தமிழ்த் தேசத்தின் கட்டுமானத்தில் கடுமையாக உழைத்த அர்ப்பணிப் பும் உங்களின் நாமத்தை உச்சாடனம் செய்யும் இவ் வேளையில்,

உங்கள் ஆத்மாவின் சாந்திக்காக – நீங்கள் ஆத் மார்த்தமாக நேசித்தவை நிஜமாவதற்காக உங் களின் பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் தமிழ் உறவுகளும் பிரார்த்திக்கின்றனர்.

# வதந்திகள் மூலம் நாட்டில் வன்முறையை தூண்ட முயற்சி

## ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

வதந்திகள் மூலம் நாட்டில் வன்முறை களைத் தூண்ட முயற்சிக்கப்படுவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித் துள்ளது.

மக்கள் வதந்திகளை நம்பக் கூடாது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்.

வதந்திகளை பரப்புவோருக்கு எதிராக கடுமையான சட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சில முஸ்லிம் தலைவர்கள் சர்வதேச ஊட கங்களுக்கு கருத்து வெளியிட்டனர். நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல் லப்படுவதாகவும் சொத்துக்கள் அழிக்கப் படுவதாகவும் குற்றம் சுமத்தினர். இது தொடர்பில் அரசாங்கம் எவ்வித நடவ டிக்கையையும் எடுக்கவில்லை என அவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

சமூக அந்தஸ்தைப் பயன்படுத்தி இவ் வாறு ஊடகங்களில் போலியான குற்றச் சாட்டுக்களை முன்வைப்போருக்கு எதி ராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உரிய நடவடிக்கை எடுக்கப்படா விட் டால் மீண்டும் மீண்டும் துரதிர்ஷடவச மான சம்பவங்கள் பதிவாவதனை தடுக்க முடியாது. கடந்த காலங்களில் முஸ்லிம-சிங்கள வன்முறைகளைத் தூண்ட முயற்சிக்கப்பட்டது.

நாட்டில் முஸ்லிம் கடும்போக்குவாத அமைப்பு ஒன்று இயங்கி வருகின்றது. நாட்டில் வன்முறைகளைத் தூண்டும் நோக்கிலேயே புலிகள் தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தினர். அரந்தலாவை யில் பௌத்த பிக்குகளை கொலை செய் தனர். ஸ்ரீ மஹாபோதி மீது தாக்குதல் நடத்தினர். இந்த நோக்கத்தை புரிந்து கொண்ட மக்கள் பொறுமையுடன் செயற்பட்டனர்.

போர் நிறைவடைந்து ஐந்து ஆண் டுகள் கடந்துள்ள நிலையில் நாம் சமாதானத்தை மறந்து விட்டோம். அன்று வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பிரபாகரனுடன் மோதினோம்.

இன்று உலகின் பலம் மிக்க நாடான அமெரிக்காவுடன் மோதுகின்றோம் என் பதனை அனைத்து மக்களும் கவனத் திற் கொள்ள வேண்டுமென உதய கம் மன்பில தெரிவித்துள்ளார். (செ-11)

# பிரிட்டிஷ் கவுன்சில் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

இல. 70, றக்கா வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள BRITSH COUNCIL நிறு வனத்தில் நாளை 21-ம் திகதி வியாழக் கிழமை அன்று (காலை 9.00 - மாலை 3.00) 6 மணிநேர IELTS பயிற்சிப்பட் டறை (Workshop) நடைபெறவுள்ளது.

இது பயனுள்ள நிபுணத்துவ குறிப்புக் களை கொண்டிருப்பதோடு பிரித்தானிய பரீட்சகர் ஒருவரால் நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறைக்கான கட்ட ணம், முன்பதிவு மற்றும் மேலதிக விபரங் களுக்கு தொலைபேசி இல. 0217521521 ஊடாக தொடர்பு கொள்ளமுடியும் என மேற்படி நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவைகள் அலுவலர் செ.செல்வறஜிதா அறிவித்துள்ளார். (செ)

# வழக்காடு மன்றம் நிகழ்வு இன்று

(அளவெட்டி)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு யாழ்.ஸ்ரீ நதியா நகை மாளிகை அனுசர ணையில் பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராசா தலைமையில் குற்றவாளி கூண்டில் தருமர் எனும் தலைப்பில் வழக்காடு மன் றம் நிகழ்வு இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு நல்லூர் பரமேஸ்வரி மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

எனவே ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (செ-25)

# புகையிரத கடவை வீதியை திருத்தித் தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கச்சேரி ஒழுங்கை புகையிரக் கடவை வீதியை திருத்தித் தருமாறு அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதியினை கடந்த பல வரு டங்களாக அப்பிரதேச மக்கள் பாவித்து வருகின்றார்கள்.

யாழ்.மாநகர சபைக்கு சொந்தமான குறித்த வீதியூடாக பாடசாலை மாண வர்கள், கச்சேரி ஊழியர்கள், கச்சேரி க்கு வரும் பொது மக்கள் என பலரும் தினமும் சென்று வருகின்றனர்.

இந்த வீதியானது புகையிரத பாதை திருத்தப் பணிகளுக்காக மூடப்பட்டு ஒரு மாத காலமாக எந்தவொரு திருத் தப் பணிகளும் மேற்கொள்ளப்படாது காணப்படுகின்றது.

இதனால் இங்குள்ள பொது மக்கள் சுமார் 3 கிலோ மீற்றர் சுற்றி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் வயோதிபர்கள், ஓய்வூதி கள், மாற்றுத்திறனாளிகள் என்போர் மிகு ந்த சிரமத்தின் மத்தியில் கச்சேரியில் வழங்கப்படுகின்ற உதவிக் கொடுப்பன வுகளுக்கு சென்று வருகின்றனர்.

அவசர தேவைக்காக இவ் வீதியால் அன்புலன்ஸ் வாகனம் கூட வந்து போக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அம் மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை புகையிரத திருத்தப் பணிகளுக்காக மூடப்பட்ட சோமசுந்தரம் வீதி தற்போது மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த வீதியை திருத் திக் தருமாறு அப்பிரதேச மக்கள் உரிய அரச அதிகாரிகளுக்கு கோரிக்கை விடு த்துள்ளனர். (செ)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**20.08.2014 இற்கான வினா**

**அஹிம்சை என்னும் விழுமியம் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?**

**19.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**

**இந்துக்களின் புனித நூலாகிய ஸ்ரீமத் பகவத்கீதை என்பதில் அத்தியாயம் நான்கில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஞான யக்ஞம் என்று எதனைக் குறிப்பிடுகின்றார்?**

☞ ஞானம் என்னும் தீயில் அறியாமை என்னும் ஆகுதிப்பொருளை இட்டு எரித்து விடுதலே ஞானயக்ஞம். அதாவது அறியாமையை அழித்து விடுதல் என்பது இதன் பொருள்.

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## மனப்படகின் பாயை விரி



✦ பல ஆண்டுகளாக பூட்டிக் கிடக்கும் அறை இருண்டு கிடக்கும். ஆனால், அந்த அறைக்குள் விளக்கினைக் கொண்டு வந்த உடனேயே இருள் மறைந்து ஒளி பரவும். அதுபோல, இறைவனின் கருணைப் பார்வை பட்ட வுடனே யே பல பிறவிகளில் செய்த பாவங்களும் உடனேயே நீங்கிவிடும்.

✦ இறைவனின் அருள் என்னும் காற்று இடையறாது வீசிக் கொண்டு தான் இருக்கிறது. வாழ்க்கை என்னும் கடலில் முன்னேற விரும்பினால் உனது மனமாகிய படகின் பாயை விரித்தால் கடலைக் கடந்து கரை சேரலாம்.

✦ இறைவனின் திருப்புகழைப் பாடும் போது, கைகளை அசைத்துக் கொண்டும், இசைத்துக் கொண்டும் பாடுவாயாக. அப்போது பாவம் என்னும் பறவைகள் பறந்தோடிப் போகும்.

✦ சேற்றில் புரள்வது தான் குழந்தையின் இயல்பு. ஆனால், தாய் குழந்தையை அப்படியே விடாமல் குளிக்கச் செய்து சோறூட்டுவாள். அதுபோல பாவம் செய்வது மனித இயல்பு என்று கடவுள் விட்டுவிடுவதில்லை. கடைத் தேற்றும் வழிமுறைகளை அருள் செய்கிறார்.

✦ நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே உண்டு. நம்பிக்கை இல்லாதவனுக்கோ ஒன்றுமே இல்லை. நம்பிக்கை தான் வாழ்வு. வேண்டாத சந்தேகமோ, மனிதனை அழிவுப் பாதையில் கொண்டு சென்று விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவஜீவன்ஸ், உதயசூரியன் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்



உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் உடுப்பிட்டி நவஜீன்ஸ் விளையாட்டுக் கழகமும் வத்திராயன் உதய சூரியன் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் அண்மையில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில்உடுப்பிட்டி நவஜீன்ஸ் விளையாட்டுக்கழகமும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதல் 15 நிமிடங்கள் வரையும் இரு அணி வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையில் சம பலத்துடன் முட்டி மோதினர்.


ஆட்டத்தின் 19 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் கோபிநாத் அடித்த முதலாவது கோலுடன் ஆட்டத்தின் போக்கே முற்றாக மாறியது. தொடர்ந்து 23 ஆவது நிமிடத்தில் பசீலன் தனது அணிக்கான இரண்டாவது கோல் போட இடைவேளையின் போது நவஜீவன்ஸ் அணி 2:0 என முன்னிலை வகித்தது. இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி மூன்றாவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணி சார்பாக பிரியந்தன் 3 ஆவது கோலைப் போட நவஜீவன்ஸ் அணியின் வெற்றி உறுதியானது.


இந்தச் சூழ்நிலையில் 14 ஆவது நிமிடத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக வீரர் சசிதரனால் ஒருகோல் பெறப்பட 3:1 என்ற அடிப்படையில் நவஜீவன்ஸ் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் வத்திராயன் உதய சூரியன் விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

இந்த ஆட்டத்தில் எதிரணியினரின் பெரும் எதிர்ப்புக்கள் எவையும் இன்றி 4:0 என்ற கோல்கள் அடிப்படையில் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. அந்த அணி சார்பாக கவியன், செந்தூரன், ஸ்ரீகரன் மற்றும் சுதாகரன் ஆகியோர் தலா ஒரு கோலைப் போட்டு அசத்தினர். (கு)

# சின்சினாட்டி ஓபன் டெனிஸ் தொடரின் சம்பியன்களாக பெடரர், செரீனா





சின்சினாட்டி சர்வதேச ஓபன் டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் உலக தர வரிசையில் 3 ஆவது இடத்தில் இருக்கும் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), 6 ஆவது இடத்தில் உள்ள டேவிட் பெரர் (ஸ்பெயின்) ஆகியோர் மோதினார்கள்.

ஒரு மணி நேரம் நடந்த இந்த ஆட்டத்தில் பெடரர் 6:3, 1:6, 6:2 என்ற செட் கணக்கில் பெரரை வீழ்த்தி 6 ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றார். ஏற்கனவே 2005, 2007, 2009, 2010, 2012 ஆகிய ஆண்டுகளில் பெடரர் சம்பியன் பட்டத்தை வென்று இருந்தார். பெடரர் தொடர்ந்து 16 ஆவது முறையாக பெரரை சாய்த்தார்.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப்போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), 9 ஆம் நிலை வீராங்கனை அனா இவானோவிச்சை (செர்பியா) எதிர்கொண்டார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய செரீனா வில்லியம்ஸ் 6:4, 6:1 என்ற நேர்செட்டில் அனா இவானோவிச்சை தோற்கடித்து முதல் முறையாக சின்சினாட்டி ஓபன் பட்டத்தை தனதாக்கினார். இந்த வெற்றியை பெற அவருக்கு 62 நிமிடமே தேவைப்பட்டது. வெற்றி குறித்து செரீனா வில்லியம்ஸ் கருத்து தெரிவிக்கையில், இந்த சீசனில் எனது சிறந்த ஆட்டம் இதுவாகும். இந்த வெற்றி அமெரிக்க ஓபன் டெனிஸ் போட்டியில் சிறப்பாக செயற்பட உத்வேகம் அளிக்கும் என்று நம்புகிறேன் என்றார். (க)

# திக்கம் இளைஞர் வி.க. அரையிறுதிக்கு தெரிவு

கரவைச் சுடர் விளையாட்டுக் கழகத்தை 2:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்குள் முதலாவது அணியாகத் தெரிவானது திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்ற ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் வல்வை றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றது.

இதில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் கரவெட்டி கரவைச் சுடர் விளையாட்டுக்கழகமும் மோதின. இடைவேளை வரை மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணியினரும் கோல் போடுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்த போதும் அது பலிக்கவில்லை. இதனால் ஆட்டம் இடைவேளையின் போது சமநிலையில் இருந்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 11 ஆவது நிமிடத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழக வீரர் ஒருவர் எதிரணியின் கோல் பரப்பினுள் முறையற்ற வகையில் உள்நுழைந்ததால் தண்டனை உதை வாய்ப்பொன்று திக்கம் இளைஞர் அணிக்கு கிடைத்தது. இதனை அந்த அணி வீரர் தீபன் நேர்த்தியாக கோலாக்கினார்.

இதனைத் தொடர்ந்து ஆட்டம் மேலும் சூடுபிடிக்க பந்து இரு அணி வீரர்களினதும் கால்களுக்குள் அகப்பட்டு அங்குமிங்கும் திண்டாடியது. இதன்போது பல சந்தர்ப்பங்களில் கோல் போடுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அதனை இரு அணியினரும் கோட்டைவிட்டுக் கொண்டே இருந்தனர்.

ஆட்டம் நிறைவடைவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கும் போது திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக வீரர் யோகன் அருமையான கோல் ஒன்றைப்போட 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் திக்கம் [illegible] விளையாட்டுக் கழகம் வெ[illegible] முதலாவது அணியாக அரையிறுதி[illegible]க்குத் தகுதி பெற்றது.

அடுத்து இடம்பெ[illegible] ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. தொடக்கம் முதல் இறுதிவரை ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் 5:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதில் றோயல் அணி சார்பாக சயந்தன், வெள்ளை, கபில், வினோத் மற்றும் ஹென்றிஸ் வீரர் சுலோசன் தலா ஒரு கோலையும் ஹென்றிஸ் அணி சார்பாக மனோ ஒரு கோலையும் போட்டனர். (கு)

# உடுத்துறை செந்தமிழ் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## செபஸ்தியார், திக்கம் இளைஞர் வெற்றி



உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டங்களில்வெற்றிலைக்கேணி, சென். செபஸ்தியார் விளையாட்டுக்கழகம், திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

உடுத்துறை உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆழியவளை அருணோதய விளையாட்டுக் கழகமும் வெற்றிலைக் கேணி சென்.செபஸ்தியான் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் 20 ஆவது நிமிடத்தில் அருணோதயா வீரர் இராம கிருஷ்ணன் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து 26 ஆவது நிமிடத்தில் சென்.செபஸ்தியான் அணி வீரர் அலக்ஸ் பந்தொன்றைத் தட்டி உயர்த்தி அடிக்க அதனை கயித் உயர எழும்பி தலையால் இடித்து கோலாக்கினார்.

இதனைத் தொடர்ந்து 1:1 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறத்தப்பட்டது. இடைவேளையின் பின் 42 ஆவது நிமிடத்தில் அலக்ஸும் 52 ஆவது இடத்தில் அருமையும் மாறிமாறி 59ஆவது நிமிடத்தில் அலெக்ஸும் மாறிமாறி கோல் போட 4:1 என்ற நிலையில் சென்.செபஸ்தியான் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் 7:0 என்ற கோல்களால் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

அந்த அணி சார்பாக சதீஸ்குமார் 3 கோல்களையும், யோகன் 2 கோல்களையும் அகிலதீபன் 2 கோல்களையும் போட்டனர். (கு)







கந்தரோடை ஞானவைரவர் சனசமூக நிலையம் நடத்திய 2014 ஆம் ஆண்டுக்கான ஞானவைரவர் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக தி.பிரகாஷ் (தவிசாளர் வலி.தென்மேற்கு பிரதேச சபை, சுன்னாகம்) சிறப்பு விருந்தினராக கு.சாந்தகுமார் (மேலதிக பணிப்பாளர் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோர் கலந்து சிறப்பித்துக் கொண்டனர். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 150 சிறுவர்...

அவர்களது குடும்பத்தினருக்கு தற்காலிக வதிவிட அனுமதிகள் வழங்கப்படும் என குடிவரவு அமைச்சர் ஸ்காட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் அமைப்புகளிடமிருந்து விமர்சனங்கள் எழுந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வந்துள்ளது.

எனினும் அவுஸதிரேலிய அரசின் இந்த புதிய கொள்கையானது, அவுஸதிரேலிய பெருநிலப்பரப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பத்து வயதுக்கு மேற்பட்ட சிறார்களுக்கும் மற்றும் அவுஸதிரேலிய நிலப்பரப்புக்கு வெளியே பாப்வா நியூகினி மற்றும் நவ்ரூவிலுள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறார்களுக்கும் பொருந்தாது.

கடந்த சில ஆண்டுகளாக, அகதித் தஞ்சம் கோரும் நோக்கில், படகில் வருபவர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்ததை அடுத்து, தஞ்சம் கோரிகள் தொடர்பிலான தமது நிலைப்பாட்டை அவுஸதிரேலியா மேலும் கடுமையாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது. செ-11)

## இராணுவ...

யில் விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸ் நிலையத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு அதிகாரிகள் சௌத்பார் இராணுவ முகாமிற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

எனினும் சௌத்பார் இராணுவ முகாம் அதிகாரிகள் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை எனக் கூறப்பட்டது.

இது தொடர்பாக மன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் குறித்த இராணுவ சிப்பாயை கைது செய்வதற்கான அனுமதியையும் பெற்றுள்ளனர்.

குறித்த இராணுவ சிப்பாயை தற்போது கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் மன்னார் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை சிறுமி மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணைகளில் இராணுவச் சிப்பாய் ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரிய வந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார். (செ-11)

## ஐ.சி.சி தரப்படுத்தலில் இலங்கை அணி முன்னேற்றம்

பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரை வெற்றி கொண்ட இலங்கை அணி, ஐ.சி.சி தரப்படுத்தலில் நான்காம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

தொடர்ச்சியாக திறமையை வெளிப்படுத்திவரும் இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இதேவேளை, இலங்கை அணியின் நட்சத்திர வீரர் குமார் சங்கக்கார துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதலிடம் வகிக்கின்றார்.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 23 விக்கட்டுக்களைக் கைப்பற்றிய ரங்கன ஹேரத் டெஸ்ட் பந்து வீச்சாளர்களின் தரப்படுத்தலில் மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளார் (க)

## யாழில் துப்பாக்கி மறைந்து கத்தி கலாசாரம் உருவெடுப்பு

### யாழ்.அமெரிக்க மிஷன் தலைவர் கவலை

யாழில் துப்பாக்கி கலாசாரம் மறைந்து தற்போது கத்தி கலாசாரம் எங்கும் பரவிக் காணப்படுவதாக அமெரிக்கன் மிஷன் தலைவர் அருட்பணி ஈரோக் புனிதராஜ் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற சர்வமத சகவாழ்வுக்கான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணத்தில் மது அதிகம் விற்பனையாவதால் அனைவரும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இளைஞர்கள் மீது வன்முறை தூண்டப்பட்டு வருகின்றது. இதனால் துப்பாக்கி கலாசாரம் போய் கத்தி கலாசாரம் வந்துவிட்டது.

ஆகவே புத்தியை பாவிப்பதற்கு பதிலாக இளைஞர்கள் கத்தியை பாவிக்கின்றனர். எனவே இந்த நாட்டின் அவலத்தை மாற்றியமைக்க வேண்டியது மதத்தலைவர்களுக்கான முக்கிய கடமை என அவர் தெரிவித்தார். (செ-11)

## ஐ.நா விசாரணையாளர்கள்...

நேற்று செவ்வாய்க்கிழமை காலை அலரி மாளிகையில் வெளிநாட்டு ஊடகவியலாளர் குழு ஒன்றைச் சந்தித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் அவர்களை நாட்டிற்குள் அனுமதிக்கப் போவதில்லை. நவநீதம்பிள்ளை பக்கச் சார்பாகச் செயற்படுகிறார்.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு அரசியல் நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுகிறது என்றே தெரிகிறது. எப்படியிருப்பினும் இலங்கைக்குள் வந்து அவர்கள் விசாரணை நடத்துவதற்கான விஸா அனுமதியை நாம் வழங்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன் பொலிஸ் அதிகாரங்களை எந்த சூழ்நிலையிலும் மாகாணங்களுக்கு பகிரமுடியாது. அந்த அதிகாரத்தை வைத்திருக்கும் உரிமை மாகாணங்களுக்கு இல்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அனைத்து மாகாண சபைகளும் ஏற்கெனவே அந்தந்த பகுதிகளை நிர்வகிக்கும் அதிகாரங்களைக் கொண்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் மாகாணங்கள செயற்படுகின்றன. ஆனால் பொலிஸ அதிகாரத்தை மாகாணங்களுக்கு பகிரமுடியாது. அது மத்திய அரசிடமே இருக்கும் என்றார். இதேவேளை இலங்கை அரசின் ஒத்துழைப்பு இல்லாவிட்டாலும், ஐ.நா அமைப்பால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் நடைபெறும் என்று கடந்த வாரம், ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் தலைவர் நவநீதம்பிள்ளை அறிவித்திருந்தார். இந்த விசாரணைகள் தொடர்பில், இலங்கைக்கு வெளியேயும் ஏராளமானத தகவல்கள் உள்ளன என்று நவநீதம்பிள்ளை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இருவர்...

எரிபொருள் நிலையத்தைப் பூட்டிவிட்டு அவரும் அங்கு பணியாற்றும் ஒருவரும தமது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்களை வாளால் வெட்டிவிட்டு அவர்கள் கொண்டு வந்த பணப் பையையும் அபகரித்துச் சென்றனர். அவரது வீட்டுக்கு அருகில் வைத்து வெட்டப்பட்ட முகாமையாளரும் அவரது உதவியாளரும் கூக்குரலிட்டதை அடுத்து அயலவர்கள் வந்து அவர்களை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். முன்னரும் இரு தடவைகள் எரிபொருள் நிலையத்தை பூட்டிவிட்டு முகாமையாளர் வீட்டுக்கு வரும் வழியில் அவர் கொண்டு வந்த பணத்தை இனந்தெரியாதவர்கள் அபகரித்துச் சென்றதாக தெரியவருகின்றது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் பறித்துச்செல்லப்பட்ட பை பின்னர் நாயன்மார்கட்டு வாலையம்மன் கோயிலுக்கு முன்பாக உள்ள ஆடியபாதம் வீதியில் வீசப்பட்டுக் காணப்பட்டது. கோப்பாய் பொலிஸார் பின்னர் அந்தப் பையை மீட்டுச் சென்றனர். இது தொடர்பான விசாரணையை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மகிந்த அனுமதித்தால்...

கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகிய படைத்தரப்பின் பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்ற அவர், கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வழக்கமாக, எந்தவொரு நாட்டு அரசாங்கத்துடனும் முறுகல் நிலையைக் கடைப்பிடிக்கும் தரப்புகளுடனான சந்திப்புகளை நாம் ஊக்குவிப்பதில்லை.

இந்தியாவின் தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி சந்திப்புக்கான நேரங்களை இலகுவில் வழங்குவதில்லை .

இலங்கை அரசாங்கத்துடனான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளது. இந்த செயல்முறைகளைப் பலவீனப்படுத்தும் வகையில் எவ்வித நடவடிக்கையையும் இந்தியா மேற்கொள்ளாது.

இவ்விரு நாடுகளுக்கும் இடையலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக, அடுத்த மாதம் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த நேரத்திலும் வந்து, பிரதமரைச் சந்திப்பதற்கு கடந்தமுறை போல இப்போது இருக்காது என்று அவர் இவ்வூடகத்துக்கு மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## காணாமல் போனோர்...

அகதி முகாமகளில் இருந்து இரகசியமாகத் தப்பிச் சென்றவர்களும் அடங்கியிருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ள அவர், இவ்வாறு தமது நாடுகளில் தஞ்சமடைந்துள்ளவர்களின பெயர் மற்றும் விபரங்களை வெளியிட வெளிநாடுகள் மறுத்து வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு தஞ்சமடைந்தோரின் பெயர், விபரங்களை வெளிப்படுத்துவது சட்டச் சிக்கல்களை ஏற்படுத்தும் என்றும், அவர்களின் உறவினர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றும் இந்த நாடுகள் கூறி வருவதாகவும் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

இத்தகைய தகவல்களைப் பெறுவதற்கு வழிமுறைகள் இல்லாத நிலையில், ஏனைய வழிமுறைகளின் ஊடாக தமக்குத் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பெரும்பாலான அகதிகள் முதலில் இலங்கையில் இருந்து தமிழகத்துக்குச் சென்று அங்கிருந்து, ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும், அவ்வாறு சென்றவர்களுள் காணாமற்போனவர்களும் அடங்கியிருக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காணாமற் போனவர்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என உள்ளூரிலும், சர்வதேச ரீதியிலும் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த ஆணைக்குழுவை நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் முழுமையான அனுசரணையுடன் வறுமை நிலையிலுள்ள சிறைக் கைதிகளின் குடும்பங்களுக்கு மாதாந்த உதவி வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் கொழும்பில் நடைபெற்றது.

இதில் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் மாதாந்த உதவி திட்டத்தின் ஒரு நிகழ்வு கொழும்பில் நடைபெற உள்ளது. இது தொடர்பான கலந்துரையாடலில் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன், தொழில் அமைச்சர் கௌரவ காமினி லொக்குகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## FRENCH MOVIES - JAFFNA

**Alliance Française de Jaffna**

cordially invites you to the screening of

### CHILDREN OF PARADISE 2

The French classic movie in black and white.
(1945, 95 min)

on Thursday 21 August 2014 at 4:00 p.m.

at Alliance Française de Jaffna,
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 0212228093

(7450)

French language. English subtitles. Free entrance.


## பொருளியல் வரதராஜனுக்கு எம் இதய அஞ்சலி



வரதன Sir,

நீங்கள் பூலோகத்தை விட்டு மேலோகத்திற்கு போனதன் காரணம் இப்போது அறிந்து கொண்டோம். நீங்கள் பூலோகத்திற்கு செய்த பொருளியல புரட்சியை மேலோகத்தவர்கள் அறிந்து கொண்டார்கள். எனவே வரதன் மாஸ்ரர் பூலோகத்திற்கு மாத்திரம சொந்தமானவர் அல்லர். அவருடைய பொருளியல் புரட்சி மேலோகத்திற்கும் தேவை என தேவர்கள் கருதிவிட்டனர். எனவே Sir, தேவர்கள் வந்து வெண்தாமரை வீசி, வெண்குடை பிடித்து வெள்ளைத் தேரில் அழைத்துச் செல்வார்கள். இளவரசே கண்ணுறங்கு......

(C-8240) **BEACON** நிர்வாகி, ஆசிரியர், மாணவர்கள்

## கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 * 12 * 1951 | 18 * 08 * 2014 |



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவர்,
சமூகப் புலமையாளன், ஆற்றல் மிகு பொருளியல் ஆசான்

அமரர்

### சின்னத்துரை வரதராஜன்


அவர்கள்

**அன்னாருக்கு எமது இதய அஞ்சலியை தெரிவிப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

(7457)

அன்னாரின் பிரிவால் துயருறும்
**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**
**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை வரதராஜன்

**(பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை - வரதராஜன் (பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்) 18.08.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - மகேஸ்வரி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், சகுந்தலாவின் அன்புக் கணவரும், Dr.இளவேணி, பார்த்தீபன் (Littleaid) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.அனுஜன் (யாழ்.போதனா வைத்தியசாலை), சிந்துஜா (நூலக உதவியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும், சிவசுப்பிரமணியம் (கனடா), விஜயகுமார் ஆகியோரின் சகோதரரும், தேனுசானின் (British Business Collage) பேரனும், யமுனாவதி, காலஞ்சென்ற பானுகலா (கனடா), Dr.சாந்திகுமார் (லண்டன்), ராஜசிங்கம், சாந்தநிதி (லண்டன்), கிரிதரன், சிறிதரன், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஜனார்த்தனி (லண்டன்), செந்தூரன், பிரகாஸ், கோகுலன் (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும், மயூரன் (டுபாய்), அபிராமி (யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி), ஸ்ரீகஜன் (யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.08.2014) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று 12.00 மணியளவில் DCM கல்வி நிறுவனத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**215, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள்**

(7448)

இரு ஆலோச... ளனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதற்கான அறிவிப்பை நேற்று விடுத்துள்ளார். இந்திய மனித உரிமை செயற்பாட்டாளரான அவ்டாஸ் கௌசல் மற்றும் பாகிஸ்தானின் அஹ்மர் பீசூபி ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே இந்த ஆலோசனை குழுவில் டெஸ்மன் டி சில்வாவின் தலைமையில சர்வதேச நிபுணர்கள் இருவர் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


## விற்பனைக்கு

நிலாவரையில் தொடராக உள்ள சகல வசதியுடைய மூன்று கடை உடனடியாக விற்பனைக்குண்டு.

உங்கள் விண்ணப்பங்களை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பவும்

விளம்பர இலக்கம் 7440
வலம்புரி அன்கோ, இல.03,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(7440)

## வாடகைக்கு

ராசவின் தோட்ட வீதிக்கும் கோயில் வீதிக்கும் இடையில் இரண்டு அறைகள் கொண்ட அளவான வீடு ஒன்று வாடகைக்கு விடப்படவுள்ளது.

(C-8241)

தொடர்புகளுக்கு : 0779787957
0718122777, 0778759587

## Grade 05

ஆங்கில மொழி மூலம் கல்வியைத் தொடர...

ENGLISH MEDIUM
**Preparatory Course**
(03 Months)
20. 08. 2014 @ 4.00p.m.
23. 08. 2014 @ 8.00a.m.

VeRni ENGLISH ACADEMY
Temple Road, Nallur.

R.Manochkumar
077 8085 423
(கைலாசபிள்ளையார் கோவில் முன்னால்)

(7452)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி** af Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், சரியான உச்சரிப்பு, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம் இன்றே பதிவுசெய்யுங்கள்

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்...

(7449)

SPEED LANKA EXPRESS Courier

## வெளிநாடுகளுக்கான



**தபால் பொதி விநியோக சேவை**

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

**Speed Lanka Express (Pvt) Ltd.**

(C-8242)

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

நல்லூரான் அருள் பரவட்டும் அகிலமெலாம்

உங்கள் அபிமான புதிய தலைமுறை ஐஸ்கிறீம் நிறுவனமாகிய

## SYLO ICE CREAM

(Sweet your Life orbit)

நல்லூர் முன் பருத்தித்துறை வீதியில் இல. 521C கட்டடத்தில் விழாக்கால விற்பனை நிலையத்தை அமைத்துள்ளது.

நம்பகமான Pasterzed மற்றும் Homeginezed முறைப்படி 100% சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் பல வகை ஐஸ்கிறீம் வகைகளை சுவைத்து மகிழுங்கள்.



521 C, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
இல. 76, அம்மன் வீதி, கொக்குவில். 021-4926003

(7451)

## முக்கிய அறிவிப்பு




உலக சாதனை நிகழ்வு மார்கழி 01 ஆரம்பம். இடம் : சாவகச்சேரி, ஏ9 பிரதான வீதி. 50 பரப்பளவு கொண்ட காணியில் இச்சாதனை இடம்பெற உள்ளது.

01 வருடகாலத்துக்கு இது இடம்பெறும். அதற்குள் சிற்றுண்டி சாலைகள் குத்தகைக்கு விடப்பட உள்ளது. ஆர்வம் உள்ளவர்கள் இந்த இடத்துக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி : இல. 426 (780), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 021 730 6070

(7439)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ. ஸ்தாபனத்தாரால் இல. [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.